**இலங்கை மின்சார சபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளினது - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்
### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மின்சார சபையினதும் (சபை) அதன் துணைக் கம்பனிகளினதும் (குழுமம்) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமென நான் கருதும் அவதானிப்புக்களும் கருத்துரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுள்ளன. எல்ரீஎல் ஹோல்டிங் (பிரைவட்) லிமிடட் இன் நிதிக்கூற்றுக்கள் குறித்த துணைக் கம்பனியின் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றால் கணக்காய்வு செய்யப்பட்டது.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குழுமத்தினதும் சபையினதும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையினதும் குழுமத்தினதும் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், பொருத்தமானவாறு அதனை வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது குழுமத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையினதும் குழுமத்தினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையும் குழுமமும் அவற்றின் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையினதும் குழுமத்தினதும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுமத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் குழுமத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையினதும் குழுமத்தினதும் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையினதும் குழுமத்தினதும் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபையும் குழுமமும் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபையினதும் குழுமத்தினதும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| இணங்காமையுடன் தொடர்புடைய உரிய நியமங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) நிதிசார் அறிக்கையிடலுக்கான எண்ணக்கருவாக்க சட்டகம்** | | |
| (i) சபையின் கீழ் தனிப்பட்ட ஒரு பிரிவாக இயங்குகின்ற ஊழியர் சேமலாப நிதியத்தின் (ஊ.சே.நி.) ரூபா 53.63 மில்லியன் தொகையான செலவுகள் சட்டகத்தின் 4.1 (ஆ) பந்திக்கு முரணாக, சபையின் வருமானக் கூற்றில் அதற்குரிய செலவினமாக இனங்காணப்பட்டிரு ந்தது. | இந்த விடயம் தொடர்பில் ஒரு சபை விஞ்ஞாபனம் இ.மி.ச. இன் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் இந்த விடயத்தை விரிவாகக் கருத்தில் கொண்டு, நிதியத்தின் முகாமைத்துவ மற்றும் நிர்வாகச் செலவுகளைச் செய்வதற்கான தற்போதைய கொள்கையைத் தொடர்வதற்கு சபை | கணக்கீட்டு நியமத் திலுள்ள ஏற்பாட்டுத் தேவைப்பாடுகளு டன் இணங்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஒப்புதல் அளித்துள்ளது. | |
| (ii) சட்டகத்தின் 4.3 ஆம் பந்திக்கு முரணாக, சபைக்குச் சொந்தமான ரூபா 8 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் ஊ.சே.நி. இன் செயற்பாடுகளிற்காக பயன்படுத்தப் பட்டிருந்தன. | இது தொடர்பில் முகாமைத்துவத்தால் கருத்துரை வழங்கப்படவில்லை. | ஊ.சே.நி. இன் செயற்பாடுகளிற்காக சொத்துக்களை பய ன்படுத்துவதற்கு முறையான அங்கீ காரம் பெறப்படுதல் வேண்டும். |
| **(ஆ) எல்கேஏஎஸ் 2 - இருப்புக்கள் மற்றும் எல்கேஏஎஸ் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்** | | |
| சபையானது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளிற் காக ஏற்பட்ட மேந்தலைக் கிரயங்களை பெறுமதியிடுவதற் காக மேற்படி நியமங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உண்மைக் கிரயங்களை பிரயோகிப்பதற்குப் பதிலாக நியமக் கிரய முறையை பிரயோகிக்கின்றது. இதன் விளைவாக, அவற்றின் மீது ஏற்பட்ட சாதக மேந்தலை விலை மற்றும் பொருள் விலை முரண்கள் ரூபா 4.04 பில்லியன் கூட்டுத்தொகையாக காணப்பட் டது. அத்துடன் ரூபா 1.78 பில்லியன் கூட்டுத்தொகையான பாதக களஞ்சிய விலை முரணும் காணப்பட்டது. எனினும், அம் மூலதன வேலைகள் தொடர்பில் தேவையான தகவல்கள் காணப்படாததன் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்பட்டுள்ள தாக்கத்தை மதிப்பிட முடியாதிருந்தது. | நியமக் கிரயத்திற்கும் உண்மைக் கிரயத்திற்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்காக ஆண்டுக்கு இருமுறை நியமக் கிரயத்தை மீளாய்வு செய்வதற்காக விலை நிர்ணயக் குழுவிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. மேற்கூறியவற்றைத் தவிர, இ.மி.ச. நிறையளித்த சராசரி சரக்கிருப்பு மதிப்பீட்டு முறையுடன் இணைந்ததாக ERP முறையை நடைமுறைப்படுத்தும் செயல்முறையில் ஈடுபட்டுள்ளது. இ.மி.ச. இல் ERP முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படும். மேலும், மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளின் மேந்தலைக் கிரயத்தை உறிஞ்சுவதற்கான ஒதுக்கீட்டு முறையொன்று காணப்படுதல் வேண்டும்.<br><br>மேந்தலைக் கிரய விகிதமானது அந்தந்த மூலதன அல்லது பராமரிப்பு வேலைகளிற்கு குறித்த மேந்தலையை நேரடியாக பகிரத்தக்க முறையைப் பயன்படுத்தி கணிப்பிடப்படுவதுடன் அந்த வேலைகளுக்கு அது உறிஞ்சப்படுகின்றது. | இருப்பை பெறுமதி யிடுகையில் உண் மைக் கிரயம் அல் லது அண்ணள வான கிரய அடிப் படை பிரயோகிக் கப்படுதல் வேண் டும். |
| **(இ) எல்கேஏஎஸ் 8 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்**<br>இ.மி.ச. இனால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 197.21 பில்லியன் முழுமையாகத் தேய்விடப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலமானது கணக்கீட்டுக் கொள்கை 2.4.6 (உ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு | கணக்காய்வு அவதானிப்பை தீர்ப்பதற்கான ஒரு பொறிமுறையினை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.<br><br>மோட்டார் வாகனங்களுக்கான திருத்தப் பட்ட பயனுள்ள ஆயுட் காலம் தொடர்பான தேவையான வெளிப்படுத் தல்கள் கணக்கீட்டுக் கொள்கை 12 மற்றும் முன்னைய ஆண்டுச் | சபையின் கணக் கீட்டுக் கொள்கை யுடன் இணங்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. மேலும், சபை அதனது வாகன அணியின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்க்கைக் காலத்தை மீளாய்வா ண்டில் மாற்றியமைத்திருந்ததுடன், அதற்கமைய முன்னைய ஆண்டின் சீராக்கமாக ரூபா 3.17 மில்லியன் தொகை நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருந்தது. | சீராக்கலுக்கான குறிப்பு 33 ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ளதுடன், மேலதிக வெளிப்படுத்தல்கள் தேவைப்படின், அது குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளில் வெளிப்படுத்தப்படும். | |
| **(ஈ) LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்** | | |
| மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பரிமாற்றல் பிரிவிலுள்ள சொத்துக் களின் பெறுமதி ரூபா 202.9 பில்லியன் ஆகும். அச்சொத்துக்க ளில் ரூபா 201.01 பில்லியன் தொகையான நிலையான சொத்து க்கள் மீளாய்வாண்டின் இறுதியில் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | அனைத்து அசையும் நிலையான சொத்துக்கள் தொடர்பான பௌதீக மெய்மையாய்வு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன் கணக்காய்வின் தேவைக்காக பதிவேடுகள் வழங்கப்பட்டன. எனவே, பரிமாற்றப் பிரிவுடன் தொடர்புடைய இந்த சொத்துக்களை பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | LKAS 16 இன் பிரகாரம் ஆண்டு தோறும் நிலை யான சொத்துக்கள் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சரவையின் 2010 ஒக்தோபர் 13 ஆந் திகதிய 10/2434/423/034 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் லக்விஜயா மின்வலு ஆலையின் நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 159.18 மில்லியன் கடன் தொகை திறைசேரியினால் லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட் (எல்சிசி) இற்கு மாற்றப்பட வேண்டும். அதற்கமைய, எல்சிசி இற்கான கடன் சேவைக்காக அதற்குச் சமமான தொகையினை இ.மி.ச. செலுத்துதல் வேண்டும். மேலும், திறைசேரியின் செயலாளரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் படி, இக்கடன்கள் சபையின் நேரடிக் கடன்களாகக் கருதப்படுதல் வேண்டும். அதன்படி, நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக நடைமுறையல்லாத மற்றும் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் கடன் மீதியின் நீண்ட கால மற்றும் குறுங்கால தொகைகளை அங்கீகரிப்பதற்கான கணக்கீட்டுப் | இக்கடனுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் ஆகிய இரண்டும் இ.மி.ச. இன் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டு ள்ளமையால் பொது முயற்சிகள் திணைக்களத்தில் நடைபெற்ற கூட்டத்தில், மேற்படி கடன்களைச் இ.மி.ச. இற்கு வழங்க வேண்டுமென சுட்டிக் காட்டப்பட்டது. அதன்பிறகு, 2019 முதல் கடன் கொடுப்பனவுகளை இ.மி.ச. இன் உரிமைத்துவமாக மாற்றுவதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன. | |

| | | |
|---|---|---|
| பரிகாரம் காணப்படுவதை சபை உறுதி செய்தல் வேண்டும். வருடத்திற்கு வாரியம் செலுத்த வேண்டிய வட்டியை முறையாக அங்கீகரித்திருக்க வேண்டும் என்றாலும், சபையால் எந்த ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன் இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) 2018 திசெம்பர் 31 இற்கு முன்னர் பொது திறைசேரியால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 61 பில்லியன் கடனின் திருப்பிச் செலுத்தும் தொகை சபையின் நிதிக் கூற்றுக்களில் உரிமைத்துவமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | இக்கடன்களை இ.மி.ச. ஆல் பெறப்பட்ட நேரடிக் கடன்களாக கருதுவதற்கு திறைசேரி தீர்மானித்துள்ளமையால், அத்தகைய உப கடன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படவில்லை. இ.மி.ச. இன் திரவத்தன்மை கட்டுப்பாடுகள் காரணமாக திறைசேரியால் கடன் சேவை செலவுகள் செய்யப்படுவதால், கடன் வழங்கும் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட நாணயமாற்று வீத நட்டம் உள்ளிட்ட உண்மையான பணத்தொகை கடன் உரிமைத்துவமாக இ.மி.ச. இற்கு மாற்றப்பட்டது. | திறைசேரிச் செயற் பாடுகள் திணைக் களத்திடமிருந்து எழுத்து மூலமான பணிப்புரை கிடைத் தவுடன் சீஈபீ இன் புத்தகங்களைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின 42 (6) ஆம் பிரிவின் படி சபைக்கு வழங்கப்பட்ட கடன்களை இலங்கை ரூபாவுக்கு மீள்மதிப்பீடு செய்வதுடன் தொடர்புடைய எந்த இழப்பும் அல்லது இலாபமும் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு திரட்டிய நிதியத்துக்கு சாட்டப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், சபை 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அதன் விரிவான வருமான கூற்றில் முறையே ரூபா 6,700 மில்லியன் மற்றும் ரூபா 676.37 மில்லியன் தொகையினை நாணயமாற்று இழப்பாக சாட்டியிருந்தது. ஆகையால், 2020 மற்றும் 2021 ஆண்டுகளிற்கான நட்டங்கள் முறையே முறையே ரூபா 6,700 மில்லியன் மற்றும் ரூபா 676.37 மில்லியன் தொகைகளால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி, உரிமைத்துவமாக மாற்றப்பட்ட கடன்களின் மூலதன மீளளித்தலுடன் தொடர்புடைய நாணயமாற்று நட்டங்கள் விரிவான வருமானக் கூற்றில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | இ.மி.ச. அதன் சட்டத்திலுள்ள தேவைப்பாடுகளு டன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) இருப்பு பற்றாக்குறையுடன் தொடர்புடைய ரூபா 123.86 மில்லியன் வரவு மீதி மற்றும் இருப்பு மிகையுடன் தொடர்புடைய ரூபா 32.65 மில்லியன் செலவு மீதி என்பன தீர்வு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு | 2022 யூன் முதல் ஆகஸ்ட் 31 வரையிலான காலகட்டத்தில் ரூபா 93,823.50 தொகையான இருப்புப் பற்றாக்குறை நீக்கப்பட்டது. எஞ்சிய நிலுவை மீதிகளை அகற்றுவதற்காக பின்தொடர் நடவடிக்கைகள் | இருப்பு மிகைகள் மற்றும் பற்றாக்கு றைகளை தீர்ப்பத ற்கு தேவையான நடவடிக்கைகளை துரிதமாக எடுத்தல் |

| | | |
|---|---|---|
| மேலாக இருப்பு சீராக்கல் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. | எடுக்கப்பட்டு வருகின்றன. சில இருப்புப் பற்றாக்குறைகள், இருப்பு மேலதிகங்கள் மற்றும் இருப்புச் சீராக்கல் மீதிகள் நீக்கப்பட்டன. WPSII இன் விடயத்தில், நிலுவையில் உள்ள தொகையை பரீட்சப்பதற்கும் பரிந்துரைகளை வழங்குவதற்கும் ஒரு குழு நியமிக்கப்படும். | வேண்டும். |
| (இ) 2014 திசெம்பர் 31 இற்கு பின்னர் செயற்திட்டங்களிற்கான வெளிநாட்டுக் கடன்களிலிருந்து கிடைத்திருந்த ரூபா 25.23 பில்லியன் தொகை திறைசேரியிடமிருந்து கிடைத்த உப கடன்களாக பதிவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், இந்தக் கடன்கள் குடியரசின் கணக்குகளில் உப கடன்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. மேலும், 2015 மார்ச் 18 ஆந் திகதிய 15/0228/613/012 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த கடன்களை திருப்பிச் செலுத்தும் பொறுப்பு சபைக்கு ஒப்படைக்கப் பட்டிருந்தது. இருப்பினும், இந்த கடன்களுக்கான மூலதன திருப்பிச் செலுத்துதல் மற்றும் வட்டி செலுத்துதல் தொடர்பில் எவ்வித கொடுப்பனவையும் சபை செலுத்தவுமில்லை அல்லது அதற்கான ஏற்பாடுகளை செய்யவுமில்லை. எனவே, இந்தக் கடன்களின் சரியான தன்மையை கணக்காய்வில் மதிப்பாய்வுசெய்ய முடியவில்லை. | பொது முயற்சிகள் திணைக்களத்தில் 2018-01-11 அன்று நடைபெற்ற கூட்டத்தில், 2014.12.31 இற்குப் பின்னர் பொது திறைசேரியின் ஊடாக இ.மி.ச. இற்கு வழங்கப்பட்ட கடன்களை அமைச்சரவை ஒப்புதலுடன் இலங்கை அரசாங்கத்தின் உரிமைத்துவத்திற்கு மாற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டது.<br><br>மேலும், இது தொடர்பில் மேலதிக ஆலோசனைகள் 2021.07.14 ஆந் திகதிய (FM/AFM (HQ)/Treasury Loans) கடிதத்தின் ஊடாக பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து கோரப்பட்டது. ஆகையால், திறைசேரியிடமிருந்து பணிப்புரை கிடைக்கும் வரை இந்த மீதி உரிமைத்துவத்திற்கு மாற்றப்பட்டு, திறைசேரிக்கான பொறுப்பொன்றாக இ.மி.ச. இதனை பதிவுசெய்துள்ளது. | திறைசேரியின் அறிவு றுத்தலுக்கு அமைய இந்த விட யம் தீர்க்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) ரூபா 66.83 பில்லியன் பெறுமதியான ஆறு வெளிநாட்டுக் கடன்கள் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கடன்களாக சபையின் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டிரு ந்தது. இருப்பினும், இது தொடர்பில் பொதுத் திறைசேரியுடன் எவ்வித உப கடன் உடன்படிக்கைளிலும் கைச்சாத் திட்டிருக்கவில்லை. அதன்படி, அந்தக் கடன்களை மீளளிப்பதற்கான கடப்பாடு உரிய விதத்தில் சபையால் இனங்காணப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், இந்த கடன்களை தீர்ப்பத ற்கான ஏற்பாடுகளையும் அல்லது மூலதன திருப்பிச் செலுத்துதல் மற்றும் வட்டி செலுத்துதல் தொடர்பிலான எவ்வித ஏற்பாடுகளையும் சபை செய்திருக்கவில்லை. எனவே, இந்தக் கடன்களின் முழுமையான மற்றும் சரியான தன்மையை கணக்காய்வில் திருப்திகரமாக மதிப்பாய்வுசெய்ய முடிந்திருக்கவில்லை. | இலங்கை அரசாங்கத்திற்கும் கடன் வழங்கும் நிறுவனத்திற்கும் இடையே கடன் ஒப்பந்தங்கள் ஏற்கனவே கையெழுத்திடப்பட்டுள்ளன. ஆகையால், திறைசேரியினாலும் கடன்களிற்கான மீளளித்தல்கள் செய்யப்படுகின்றன. இது தொடர்பில் மேலதிக ஆலோசனைகள் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து கோரப்பட்டது. | பொதுத் திறைசேரியுடன் உப கடன் உடன்படிக்கையில் கையெழுத்திடுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசாங்க நிறுவனங்களின் மின் பிறப்பாக்கிகள், மின்தூக்கிகள் மற்றும் வளிப் பதனாக்கிகளின் வழங்கல், பராமரிப்பு மற்றும் திருத்தத்திற்காக சபையால் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அவற்றின் விலைச்சிடடைப் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கிரயத்தில் பெறுமதியிடப்பட்டு அதற்கிணங்க அவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறவேண்டியவைகள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் என்பன 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 36.8 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | 2021-12-31 நிலவரப்படி, அரசு நிறுவனங்களுக்காக மேற்கொள்ளப்படும் வேலைகளின் உண்மையான கிரயத்திற்கும் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு ரூபா 43,421,695.18 ஆனதுடன் அது 2021.12.31 இல் ரூபா 36,811,013.41 ஆகும். இந்த நிலுவையில் உள்ள மீதிகளில் மத விழாக்கள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் போன்ற ஏனைய செயற்பாடுகளுக்கு நடமாடும் மின் பிறப்பாக்கிகளை வழங்கியமைக்காக மத நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய மொத்தத் தொகையான ரூபா 33,784,518.05 இனை அறவிடுவதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரும் இந்த மீதிகள் நீண்ட காலமாக நிலுவையில் காணப்படுகின்றமையால் இதனை பதிவழிப்புச் செய்வதற்கு 2021 ஆகஸ்ட் இல் பணிப்பாளர் சபை ஒப்புதல் வழங்கியுள்ளது. | பதியப்படாத பட்டியல்களை பெறுமதியிட்டு கணக்கீடு செய்தல் வேண்டும். கொடுக்கல் வாங்கல்களின் ஆரம்பத்தில் பெற வேண்டியவற்றை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) 2016 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரிக்கு தீர்வையாகச் செலுத்திய ரூபா 5,000 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 2,000 மில்லியன் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்களிற்கு சாட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 500 மில்லியன் மீளாய்ண்டிற்கான முகாமைத்துவக் கட்டணம் செலுத் துதல் என வகைப்படுத்தி வருமானக் கூற்றுக்கு காலத்தேய்மானம் செய்யப் பட்டிருந்தது. மீதமுள்ள ரூபா 2,500 மில்லியன் தொகை மீளாய்வாண் டிற்கான நிதிக் கூற்றுக்களில் ஏனைய கடன்பட்டோராகக் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, இந்தக் கொடுக்கல் வாங்களின் தன்மையையும் அதனை கணக்கீடு செய்யவேண்டிய முறையினையும் சபை தெளிவாக உணர்ந்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 2019.10.16 ஆந் தேதியிட்ட PDE/I/CEB/2/11/(iii) ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் கடிதத்தின் அடிப்படையில், 2019 ஆம் ஆண்டில் இந்த கொடுப்பனவு திறைசேரிக்கு செலுத்தப்பட்ட ”முகாமைத்துவக் கட்டணம்” என்று கருதப்பட்டு 2017 ஆம் ஆண்டிலிருந்து 10 ஆண்டு காலப்பகுதியில் காலத்தேய்மானம் செய்யப்படுகின்றது. | 2016 இல் பொதுத் திறைசேரியினால் விதிக்கப்பட்ட தீர் வைக்காக செலுத் திய ரூபா 5,000 மில்லியன் தொகை நிறுத்தவைத்த உழைப்புக்கு சாட்டப்படுதல் வேண் டும். |
| (எ) 04 விநியோக பிரிவிலுள்ள சொத்துக்கள் கணக்குகளுக்கு மாற்றப்படாமல் ரூபா 6.34 பில்லியன் பெறுமதியுடைய 8,094 பூரணப்படுத்திய வேலைகள் நடைபெற்றுவரும் | வேலை நிறைவுசெய்தல் அறிக்கைகள் பெறப்பட்டவுடன் அனைத்து முடிக்கப் பட்ட வேலைகளும் சொத்துக்களுக்கு மாற்றப்படுகின்றன. இந்த | பூரணப்படுத்திய வேலைகளை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டு ள்ளன. மேலும், அந்த சொத்துக்கள் தொடர்பான தேய்மானம் நிதிக் கூற்றுக்களிற்கு தாக்கல் செய்யப்பட் டிருக்கவில்லை. | வேலைகளில் ரூபா 2,643.11 மில்லியன் வேலைகள் 2022 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு சொத்துக்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. நீண்டகாலமாக நிலுவையில் உள்ள மூலதன வேலைகளை தொடர்ந்து கண்காணிப்பதற்கும், ஒப்படைப்பதற்கும் மாகாண அளவிலான குழுக்கள் நியமிக்கப்பட்டன. எனவே, 2021 உடன் ஒப்பிடும்போது தற்போது பிரிவின் நிலுவையில் உள்ள முடிவுறா வேலைகளில் கணிசமான குறைவைக் காணலாம். | |
| (ஏ) புத்தளம் நிலக்கரி மின்வலுச் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 124.30 மில்லியன் பெறுமதியான வாகனங்கள் 2014 இல் இச்செயற்திட்டம் நிறைவடைந்த பின்னரும் மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக இதுவரை முடிவுறா வேலைகள் கணக்கில் உள்ளடக்கப்ப ட்டுள்ளது. மேலும், அந்த வாகனங்கள் தொடர்பான தேய்மானம் செயற்திட்டம் முடிவடைந்த காலம் முதல் இதுவரை நிதிக் கூற்றுக்களிற்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | புத்தளம் நிலக்கரி மின்வலு செயற்திட்டத்திற்காக (Phase-02) கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 124.30 மில்லியன் பெறுமதியான 06 வாகனங்களின் உரிமையானது 2021 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கூட இ.மி.ச. இற்கு மாற்றப்படவில்லை. வாகனங்களின் உரிமை இ.மி.ச. இற்கு மாற்றப்பட்டவுடன் மூலதனமாக்கல் மேற்கொள்ளப்படும். | இந்த வாகனங் களை மூலதனமாக் குவதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) விநியோகப் பிரிவு 4 இற்குரிய ரூபா 32.32 மில்லியன் தொகையான அறவிட முடியாத தெரு விளக்கு பராமரிப்பு செலவுகளிற்கான பொருத்தமானதோர் ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வீதி விளக்கு பராமரிப்புச் செலவினத்திற்கான ரூபா 32.32 மில்லியன் தொகையான அறவிடப்பட முடியாத கணக்குகளிற்காக 2022 நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடொன்றை மேற் கொள்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அதன்படி நிதிக் கூற்றுக்களில் தேவையான சீராக்க த்தை செய்தல் வேண்டும். |
| (ஒ) அசாதாரண செலவு மீதித் தொகையை எதிரீடு செய்தமையால், சில்லறைக் கடன்பட்டோர் மீதி ரூபா 41.48 மில்லியன் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் படும். | நிதிக்கூற்றுக்களில் இந்த விடயத்தை சரி யாக முன்வை த்தல் வேண்டும். |
| (ஓ) உரிமை கோரக்கூடிய காலம் முடிவடைந்துள்ள ரூபா 2.7 பில்லியன் பொருளாதார சேவை கட்டணம் (ESC) செலவினமொன்றாக விரிவான வருமான கூற்றுக்கு தாக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. அதன்விளைவாக, ரூபா 1.13 பில்லியன் தொகையால் மீளாய்வாண்டி ற்கான நட்டம் குறைத்துக் கூறப்பட்டிருந்ததுடன் நிறுத்திவைத்த உழைப்புகள் ரூபா 1.622 பில்லியனால் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது. | நிலைமையை தெளிவுபடுத்தி ரூபா 2.7 பில்லியனை பதிவழிப்புச் செய்வத ற்கான சபை குறிப்பொன்றை சமர்ப்பி க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கோரக்கூடிய விடயங்களிற்கான கணக்கீட்டுத் தீர்வை உரிய வேளையில் செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஔ) தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாது ரூபா 871.2 மில்லியன் தொகையான வழிச்சரக்குககள் 1 முதல் 5 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட கால வீச்சில் வழிச்சரக்குக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், அசாதாரண செலவு மீதியான ரூபா 5.1 மில்லியன் தொகை அகற்றப்படாது வழிச்சரக்குக் கணக்கில் வைக்கப்பட் டுள்ளது. வழிச்சரக்கு மீதிகளிற்குரிய ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப் பெறவில்லை. | சில மீதிகளை சீராக்குவதற்கு நடவடி க்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், வழிச்சரக்குச் கணக்கை அகற்றுவதற்கு மேலதிக நடவடிக்கைகள் எடுக்க ப்படும். | குறித்த விடயத்தை தீர்ப்பதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |
| (ஃ) தெஹிவளை கல்கிஸ்ஸ மின்சார விநியோக அபிவிருத்திச் செயற்திட்டத் திற்குரிய ரூபா 39 மில்லியன் கிரயம் மூலதனமாக்கப்படாது 2010 ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுவரும் வேலைகள் கணக்கில் வைக்கப்பட் டுள்ளது. | செயற்திட்டப் பிரிவின் நடைபெற்று வரும் வேலைகளை மூலதனமாக்குவ தற்காக விநியோக பிரிவு 4 மூலம் செயற்திட்டப் பிரிவுக்கு ஏற்கனவே மாற்றப்பட்டு ள்ளது. | நடைபெற்றுவரும் வேலைகளை மூலதனமாக்குவத ற்கு தேவையான நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |
| (க) அகற்றப்பட்ட நிலையான சொத்துக்கள் தொகையான ரூ 14 மில்லியன் நிதிக் கூற்றுக்களில் பரிமாற்றப் பிரிவின் கீழ் நிலையான சொத்துகளாகக் காட்டப்பட் டுள்ளது. | 2022 ஆம் ஆண்டின் இறுதியில் நிலையான சொத்துக்கள் பதிவேட் டைப் புதுப்பிப்பதற்கும் தொடர்புடைய கணக்கீட்டுப் பதிவுகளை நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்வதற்கும் சரியான தீர்வுகளை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்ப ட்டுள்ளன. | குறித்த விடயத்தை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |
| (கா) மோசடிகள் அல்லது வழுக்கள் காரணமாக ஏற்பட்ட பொருண்மையான தவறான கூற்றுக்களை கண்டறிந்து, சரிசெய்து, தடுப்பதற்காக சரியான உள்ளக் கட்டுப்பாட்டு முறைமையை வடிவமைத்துச் செயற்படுத்துவதற்கும் பராமரித்துச் செல்வதற்கும் சபை தவறியமையால், 2013 முதல் சபையின் நிதிக் கூற்றுக்களில் தொடர்ந்தும் திருத்தி மீளமைக்கப்பட்டு வருகின்றன. | இவ்வாறான திருத்தியமைத்தலை எதிர்காலத்தில் குறைப்பதற்கு நடவடி க்கை எடுக்கப்பட்டுள்ளது. இ.மி.ச. இன் செயற்பாடுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் சிக்கலான தன்மை காரணமாக, நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான தவறான கூற்று க்கள் அற்றவை என்பதை உறுப்படுத் துவதற்காகவும் முன்னைய ஆண்டுக ளில் இடம்பெற்ற தவறுகள் காணப்படு மாயின் அவற்றை திருத்துவதற்குமே இவ்வாறன திருத்தங்களை செய்ய வேண்டியுள்ளது. | பொருத்தமான உள்ளகக் கட்டுப் பாட்டு முறைமை யொன்று அறிமுக ப்படுத்தப்பட்டு பேணப்படுதல் வேண்டும். |
| (கி) பிரிவுகளிற்கு இடையிலான நடைமுறைக் கணக்கு மீதிகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு மாற்றிமை யின் விளைவாக ரூபா 557.94 மில்லியன் வரவு மீதியொன்றும் ரூபா 556.81 மில்லியன் செலவு மீதியொன்றும் 2002 இலிருந்து அகற்றப்படாது வைத்திருக்கப்பட்டு ள்ளது. | நிதிக் கூற்றுக்களின் சிறப்பாக சமர்ப்பிப்பதற்காக, அது வியாபார கடன்பட்டோர் கணக்கிற்கு மாற்றப் பட்டுள்ளது. இந்த நிலுவையை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த மீதிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (கீ) 2019 செப்தெம்பர் 24 ஆந் தேதியிட்ட 19/2622/113/074 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் படி லக்விஜய மின்வலு உற்பத்தி நிலைய விரிவாக்கத் திட்டத்திற்காக சபை செயற்திட்ட முகாமைத்துவ அலகு ஒன்றை நிறுவியிருந்தது. அந்த செயற்திட்டத்திற்காக ரூபா 167.31 மில்லியன் தொகையை செலிவிடப்பட்ட பின்னர், 2021 யூலை 26 அன்று எடுக்கப்பட்ட அரசாங்கக் கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில் அதை மூடுவதற்கான தீர்மானத்தை பணிப்பாளர் சபை 2021 ஒக்தோபர் 26 எடுத்திருந்தது. இருந்தபோதிலும், அந்தத் தொகையை பதிவழிப்புச் செய்வதற்கான எந்தவொரு ஏற்பாடும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்பட்ட செலவினங்களை பதிவழிப்பதற்காக பணிப்பாளர் சபையின் ஒப்புதலைப் பெறுவதற்காக சபை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் சபை தீர்மானத்தின் படி கணக்குகளில் ஒரு ஏற்பாட்டை மேற்கொள்ள முடியும். | இந்த தொகையை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கு) லக்விஜய மின்வலு நிலையத்தின் சொத்துப் பதிவேட்டில் 28 வாகனங்களின் பெறுமதியும் அதன் மீதான தேய்மானமும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, அந்த வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | இந்த வாகனங்கள் LVPP செயற்திட்டத்தின் I மற்றும் II ஆம் கட்டங்களின் கீழ் பெறப்பட்டனவாகும். வாகனங்களின் பெறுமதிக்குரிய பரிமாற்றல் உறுதிச்சீட்டுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு LVPP இற்கு கிடைத்திருக்கவில்லை. | சிக்கலைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கூ) சபையின் தலைமை அலுவலகக் கட்டிடம் அமைந்துள்ள அரசுக்குச் சொந்தமான காணி சபையின் நிதிக்கூற்றுக்களில் சபையின் சொத்தாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே, சபையின் சொத்துக்கள் ரூபா 105.62 மில்லியன் தொகையால் அதிகரித்துக் கூறப்பட்டுள்ளது. | உரிய உரிமை ஆவணத்தை வழங்காமல் நீண்ட கால குத்தகைக்கு ஏற்பாடு செய்யுமாறு காணி ஆணையாளர் கொழும்பு பிரதேச செயலாளருக்கு அறிவித்துள்ளார். எவ்வாறாயினும், இ.மி.ச. குத்தகைக்கு எடுப்பதற்கு செல்ல விரும்பவில்லை என்பதுடன் சொத்தின் உரிமைக்காக காத்திருக்கின்றது.<br><br>மேலும், 2022-08-23 அன்று மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் மற்றும் சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் ஒரு சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது. இப்பிரச்சனைக்கு விரைவில் தீர்வு காண்பது என அக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. | காணியின் உரிமையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் நிதிக்கூற்றுக்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் (சீபிசீ) செலுத்த வேண்டியதாக காட்டப் பட்ட மீதிக்கும் அத்திகதியில் உள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் சபையிடமிருந்து பெறவேண்டியதாக காட்டப்பட்ட நேரொத்த மீதிக்கும் இடையில் ரூபா 1,235 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும், மேற்படி தொகையில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சர்ச்சைக்குரிய ரூபா 753.61 மீல்லியன் தொகையும் காணப்படு வதுடன், இந்த விடயம் 2013 முதல் தொடர்ச்சியாக கடந்தகால கணக்காய்வு அறிக்கை களில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.<br>அத்துடன், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 469.11 மில்லியன் கணக்கிணக்கம் செய்யப்படாத மீதியும் காணப்பட்டது. | இ.மி.ச., சீபிசீ, மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றும் திறைசேரி பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் சர்ச்சைக்குரிய ரூபா 735.61 மில்லியன் தொகை தொடர்பில் கலந்துரையா டப்பட்டதுடன், அதகை தீர்த்துவைக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின் றன. 2021 திசெம்பர் இறுதியிலும் இது வரையிலும் காணப்படுகின்ற வேறுபாடான ரூபா 469.11 மில்லியன் தொகை இ.மி.ச. இன் பட்டியல்களைத் தீர்க்கையில் முன்னுரிமையின் மீது தாமத வட்டியை நிர்ணயிப்பதன் மூலம் ஒருதலைப்பட்சமாக சீபிசீ ஆல் செய்யப்பட்ட நடைமுறைகளில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக இன்றுவரை இது ஏற்பட்டுள்ளது. | வேறுபாடுகளை கணக்கிணக்கம் செய் வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ரூபா 423.76 மில்லியன் இனங்காணப்படாத வரவு மீதி விநியோக பிரிவு 1 இல் 2012 முதல் அறவிடப்படாமல் வைத்திருக்கப் பட்டுள்ளது. இருப்பினும், அதில் ரூபா 181.42 மில்லியன் தெகை தெளிவுபடுத்தப்படாமல் விநியோக பிரிவு 3 இற்கு மாற்றப்பட்டிருந்தது. | ரூபா 423.76 மில்லியன் கடன்பட்டோர் மீதியிலுள்ள ரூபா 241.22 மில்லியன் புத்தகங்களில் தொடர்ந்தும் காணப்படுகின்றது. இந்த மீதித் தொகையை வசூலிக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.<br><br>கிடைக்கப்பெறும் தகவல்களின்படி, 2015 ஆம் ஆண்டு முதல் AFM கிரய நிலையத்தின் புத்தகங்களின் கீழ் ரூபா 423 மில்லியன் மீதி காணப்படு வதற்கான காரணம் யாதெனில், இந்த தொகை நிர்வாக பரவலாக்கத்தின் போது மாற்றப்பட்டிருக்கவில்லை. அனைத்து பிரதேச AFMMS களுக்கும் ஏதேனும் மீதி உள்ளதா என்பதைச் சரிபார்க்குமாறு தெரிவிக்கப்பட்டுள் ளதுடன் பிரதேச AFMM களிடமிருந் தும் பெறப்பட்ட பதில்களுக்குப் பின்னர் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | அந்தந்த பிரிவுகளின் பேரேட்டு மீதிகளை முறைமை மீதிகளு டன் கணக்கிணக்கம் செய் வதற்காக ஒவ்வொரு மாதமும் தேவையான நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) DD1 இலுள்ள சாதாரண கடன்பட்டோர் தொடர்பில் கணினி மயப்படுத்திய மீதிகளிற்கும் பேரேட்டுக் கணக்கு மீதிகளுக்கும் இடையே வேறுபாடுகள் காணப்பட்டன. அதன்படி, கணனி மயப்படுத்திய மீதிகளிற்கும் பேரேட்டுக் கணக்கு மீதிகளுக்கும் இடையிலான வேறுபாட்டிற்கு உரிய வேளையில் கணக்கிணக்கம் செய்யப்படாததன் விளைவாக மீளாய்வாண்டில் சாதாரண கடன்பட் டோரில் ரூபா 6.77 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | வேறுபாட்டை கணக்கிணக்கம் செய்யும் நோக்கத்திற்காக, பட்டியலிடல் முறைமையிலுள்ள மீதியும் பேரேட்டு மீதியும் கணக்கிணக்கம் செய்யப்பட்டு, ஒவ்வொரு விநியோகப் பிரிவுகளாலும் நிதிக் கூற்றுக்களுடன் கணக்கிணக்க அறிக்கை வழங்கப்படுகின்றது. | -மேற்படி- |
| (ஈ) 2021 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு சேகரிப்பு கட்டுப்பாட்டு பேரேட்டுக் கணக்கில் ரூபா 297.33 மில்லியன் வரவு மீதியும் ரூபா 1,409.57 மில்லியன் செலவு மீதியும் காணப்பட்டன. இருப்பினும், இந்த தீர்க்கப்படாதுள்ள மீதிகளிற்கான கணக்கிணக்கம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க ப்படவில்லை. எனவே சேகரிப்புக் கட்டுப்பாட்டு கணக்கிலுள்ள மீதிகளின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திரு க்கவில்லை. அத்துடன், ரூபா 166.45 மில்லியன் இனங்காணப் படாத ஆரம்ப மீதியொன்று சேகரிப்புக் கட்டுப்பாட்டுக் கணக் கில் உள்ளடக்கப்பட்டுள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது. | தொடர்புடைய கணக்கிணக்கம் உரிய நேரத்தில் அனுப்பிவைக்கப்படும். | அந்தந்த பிரிவுகளின் பேரேட்டு மீதிகளை முறைமை மீதிகளுடன் கணக்கிணக்கம் செய் வதற்காக ஒவ்வொரு மாதமும் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) 1998 முதல் 2021 வரையான காலத்தில் சேகரிக்கப்பட்ட ரூபா 68.99 மில்லியன் தொகையினை அகற்றுவதற்கு எரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாது தொங்கல் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | வாடிக்கையாளரின் முறைப்பாடுகள் பெறப்பட்ட பின்னர் தொங்கல் கணக்கு மீதிகளை அகற்ற முடியும். வாடிக்கை யாளர் சரியான வாடிக்கையாளர் கணக்கு இலக்கத்தை அறிவிக்கையில் தொடர்புடைய தொகையை வாடிக்கையாளர் கணக்கிற்கு மாற்ற முடியும். மேலும், வசூலித்தல் முகவர்களிடமிருந்து விவரங்களைப் பெறுவதன் மூலம் தொங்கல் கணக்கு அறவீட்டு மீதியை அகற்றுவதற்கு தொடர் நடவடிக்கை செயல்படுத்த ப்படுகின்றது. | நீண்டகால இனங்காணப்படாத பெறுவனவுகளிற்காக பொறிமுறையொன்றை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஊ) சபையால் வாடிக்கையாளருக்கான தவறான கட்டண முறைப் பிரயோகம் காரணமாக ரூபா 38.76 மில்லியன் தொகை 2019 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்படுகின்றது. | இந்த விடயம் கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதுடன் 2021 திசெம்பர் 28 அன்று நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின் உறுதிப்படுத்தப்பட்ட கூட்டக்குறிப்பின் படி, மின் கொள்வனவு உடன்படிக்கை | விடயத்தை முறைப்படுத்தி உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

|  |  |  |
|---|---|---|
|  | மற்றும் AES Kelanitissa (Pvt) Ltd உடன் தொடர்புடைய மொத்தக் கொள்வனவு உடன்படிக்கை தொடர்பான பரிந்துரையை மீளாய்வு செய்து சமர்ப்பிப்பதற்காக உருவாக்க ப்பட்ட குழுவின் அறிக்கையை இறுதி செய்ய கணக்காய்வுக் குழு உத்தரவிட்டது. குழுவின் அறிக்கை இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. |  |

### 1.5.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்களின் விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2007 நவம்பர் 14 இல் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் 2009 மே 26 இன் 39 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகள் என்பவற்றிற்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீது சபையின் பதவியணியினரிற்கு காலத்திற்குக் காலம் பல்வேறு பதவியணியினர் படிகள் செலுத்தப் பட்டிருந்தன. 2021 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 2,134.9 மில்லியன் மற்றும் ரூபா 1,544.4 மில்லியன் கூட்டுமொத் தமான அத்தகைய படிகள் செலுத்தப்பட்டிரு ந்தமை கணக்காய்வு தெரிவுச் செவ்வைகளின் போது வெளிப்படுத் தப்பட்டிருந்தது. மேலும், மேற்படி அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் BM/2021/22/01 ஆம் இலக்க சபை தீர்மானம் ஆகியவற்றுக்கு முரணாக 323 ஊழியர்களிற்காக செலுத்தப்பட் டிருந்த படிகள் அவர்களது சம்பளத்தைக் காட்டிலும் 65 சதவீதத்தை விஞ்சியிருந்தது. | 2022 யூலை 27 முதல் அமுலுக்குவரும் வகையில் சம்பளத்தில் 65 சதவீத எல்லைக்கு பதவியணியினர் கொடுப்பன வுகளை மட்டுப்படுத்துவதற்கு பணிப் பாளர் சபை தீர்மானித்துள்ளது. | பதவியணியினருக்கு படிகளைச் செலுத்து கையில் சுற்றறிக் கைத் தேவைப்பாடு கள் மற்றும் அமைச்சரவைத் தீர்மானங்களுடன் இணங்கியொழுகுதல் வேண்டும். |
| (ஆ) 1998 மார்ச் 08 ஆம் திகதிய 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் முதல் 14 சதவீதம் வரையான வட்டி வீதத்தில் வாகனக் கடன்கள் வழங்கப்படுதல் வேண்டும். இருப்பினும், சபை எதிர்கொண்டுள்ள திரவ பிரச்சனைகளை கருத்திற் கொள்ளாது 4.2 சதவீத வட்டி வீதத்தில் அத்தகைய கடன்களை சபை வழங்கியிருந்தது. | குறிப்பிடப்பட்டுள்ள கண்டுபிடிப்புகள் சபையினால் அதன் ஊழியர்களுக்கு நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக பணியாற்றுவதற்கான மன உறுதியை உயர்த்துவதற்காக வழங்கப்படும் நன்மைகளுடன் தொடர்புடையவை. மேலும், சபையின் விவகாரங்களின் நிர்வாகத்தைப் பொறுத்தவரை விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரத்தை இந்தச் சட்டம் வழங்குகிறது. | சட்டத்திலுள்ள அதி காரங்களை சபை செயற்படுத்துகையில் சுற்றக்கைத் தேவைப் பாடுகளுடன் இணங் குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு இ.மி.ச. நுகர்வோர் வைப்புக்களிற்கான வட்டியை செலுத்தியிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டிற்காக இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் அறிக்கையிடப்பட்ட விலைவீதத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் அவற்றின் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா 1,357.60 மில்லியனாக இருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்படாத திரண்ட வட்டி ரூபா 8,089.50 மில்லியனாக இருந்தது. | இ.மி.ச. இனால் மின்வலு அமைச்சிற்கு அனுப்பிவைத்த கடிதத்திற்கு அமைச் சின் பதிலுக்காக காத்திருக்கப்படு கின்றது. மேலே உள்ளவைக்கு மேலதிகமாக, பாவனையாளர் பாதுகாப்பு வைப்புக்கள் மீது வட்டிக் கொடுப்பனவை தொடங்குவ தற்கு சபையிடமிருந்து அனுமதி கோரி சபைப் பத்திரமொன்று தயாரிக்கப்பட்டு ள்ளது. | சட்டத்தின் தேவைப் பாடுகளுடன் இணங் குதல் வேண்டும். |
| (ஈ) தொடர்புடைய தரப்பினர்கள், தொழில்கொள்வோர் மற்றும் தொழிற்சங்கங்களால் கைச்சாத்தி டப்பட்டிருக்காத வரைவு கூட்டு உடன்படிக்கையின் அடிப்படையில் ஊழியர்களின் சம்பளத்தை 25 சதவீதத்தினால் சபை 2021 ஆம் ஆண்டில் அதிகரித்திருந்தது. அதற் கமைய, ஏறத்தாழ ரூபா 9.6 பில்லியன் அதிகாரமற்ற கொடுப்ப னவு காரணமாக சபைக்கு எதிர்மறையான தாக்கம் ஏற்பட்டு ள்ளது. | இது தொடர்பில் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை வெளியிடுமாறு இ.மி.ச. இன் பொது முகாமையா ளருக்கு சபை ஆலோசனை வழங்கியது. சபையின் தீர்மானத்தின் படி இ.மி.ச. இன் பொது முகாமையாளர் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.<br><br>ேலும், காலக்கிரமத்தில் கூட்டுப்பேரம்பேசல் உடன்படிக்கையில் கைச்சாத்தி டுமாறு அனைத்து தொழிற்சங்கங்களிற்கும் அறிவிப்ப தற்கு சபை தீர்மானித்துள்ளது. | கூட்டுப்பேரம்பேசல் உடன்படிக்கையை சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.5 ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

பின்வரும் கம்பனிகளின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது கீழே தரப்பட்டுள்ள அவானிப்புக்களின் அடிப்படையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**(அ) லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| i. வருமான வரி தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 12) 88 ஆவது பந்தியின் படி, 2017/2018 மற்றும் 2018/2019 | பெறப்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட வரி (VAT) மதிப்பீட்டிற்கான மேல்முறையீ ட்டுடன் இணைத்து 04 திருத்தப்பட்ட VAT கணிப்பீடுகளை IRD க்கு LCC சமர்ப்பித்துள்ளதுடன் அதற்கான | கணக்கீட்டு நியமத் திலுள்ள ஏற்பாடுக ளுடன் இணங்கி ஒழுகுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீட்டு ஆண்டிற்கான பெறுமதிசேர் வரியுடன் தொடர்புடைய ரூபா 287.1 மில்லியன் செலுத்த வேண்டிய மேலதிக வரி மற்றும் ரூபா 220.6 மில்லியன் அபராதங்கள் குறித்த தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத் தப்பட்டிருக்கவில்லை. | பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. வரி ஆலோசகரின் உதவியுடன் 2022/06/06 அன்று முதல் சந்திப்பு வெற்றிகரமாக நடத்தப்பட்டது. தேவைப்பட்டால், இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி, அடுத்துவரும் நிதியாண்டில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும். | |
| ii. | மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள 154 கப்பலேற்றல்களுடன் தொடர்புடைய ரூபா 33.3 மில்லியன் மீதி மற்றும் இ.மி.ச. இடமிருந்து நிலக்கரி கொள்வனவு முற்பணமாக பெறப்பட வேண்டிய ரூபா 1.8 மில்லியன் மீதி என்பன தொங்கல் கணக்கில் வைத்திருக்கப்பட்டுள்ளதுடன் கம்பனி இவற்றை தீர்வு செய்திருக்கவில்லை. | **தொங்கல் கணக்கின் ஆரம்ப மீதியின் உள்ளடக்கம்:**<br>------------------------------------------------------------------<br>இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டியவை ரூபா 4,323,787.00: 2017 இல் இ.மி.ச. உடனான கணக்கின் மீதியை தீர்வு செய்ததன் பின்னர் இந்தத் தொகை மீதமாக உள்ளது. இந்த மீதியின் மூலாதாரம்/மூலம் ஆகியவற்றைக் கண்டறிய மேலும் ஆராயப்பட்டு வருகின்றது.<br>**2021 ஆம் ஆண்டின் போது மாற்றப்பட்ட தொகையின் உள்ளடக்கம்: ரூபா 30,757,506**<br>------------------------------------------------------------------<br>''மோர்கடர்'' இற்கு செலுத்தவேண்டிய தொகையின் கணக்கீட்டு விளைவே இதுவாகும். இந்தத் தொகை ஏற்கனவே இ.மி.ச. இடமிருந்து கிடைத்துள்ளது. ஆனால் இது கணக்குகளில் பிரதிபலிக்கப்படாது தொங்கல் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் நிதியாண்டில் தொங்கல் கணக்கை நீக்குவதற்காக இந்த மீதியின் மூலாதாரம்/மூலம் ஆகியவற்றைக் கண்டறிய மேலும் ஆராயப்பட்டு வருகின்றது. | கம்பனி மூலதார மீதிகளை மதிப்பாய்வு செய்து தொங்கல் கணக்கை அகற்ற வேண்டும். |
| iii. | நிலக்கரியை இறக்குமதி செய்யும் போது, சுங்கத்தின் நோக்கத்திற்கான பெறுமதியை மதிப்பிடுகையில், ஒரு கற்பனையான சீராக்கமாக உண்மையில் ஏற்பட்டிருக்காத 10 சதவீத வரி எல்லை சேர்க்கப்பட்டுள்ளது.<br>இருப்பினும், கம்பனி ரூபா 5,324.4 மில்லியன் என்ற 10 சதவீத இலாப எல்லையினை வருவாயில் சேர்த்துள்ளதுடன் பின்னர் கம்பனி கடன்பட்டோருக்கான கழிவாக அத்தொகையை வழங்கி அதனை விற்பனை | இ.மி.ச. இற்கு வெற் விலைப்பட்டியல்களை வழங்குகையில் சுங்கத் தீர்வையினை கிரயத்துடன் சேர்ப்பதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் எல்சீசீ இற்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரின் பங்குபற் றலுடன் 2018 ஜூன் 28 அன்று அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து இந்த விலை நிர்ணய முறை பின்பற்றப்பட்டது.<br><br>இ.மி.ச. இற்கான விலைப்பட்டியலிலுள்ள வெற் வரிக்கான எல்சிசி இன் பெறுமதி அடிப்படையானது சுங்க நோக்கங்க ளுக்கான பெறுமதியை விட குறைவாக | இந்த விடயம் தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து நெறிப்படுத்தலை பெற்றுக் கொள்ள கம்பனி துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிரயத்துக்கு சாட்டுதல் செய்துள்ளது. இதன் விளைவாக, விற்பனை கிரயம் மற்றும் வருவாய் என்பன ஒத்த தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | இருக்கக்கூடாது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோ கத்தரால் கூறப்பட்டமை பதிவுசெய்து வைக்கப்பட்டுள்ளது. ஆகையால், 10% தொகை உள்நாட்டு இறைவரி உத்தியோகத்தரின் உத்தரவின் பேரிலேயே சேர்க்கப்படுகின்றது. அன்றுமுதல், இ.மி.ச. இந்த உத்தரவை சவாலுக்குட்படுத்தி, 2018-09-07 திகதிய அதனது கடிதத்தின் மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிவித்திருந்த போதிலும், அதற்கான பதில் இன்னும் கிடைக்கவில்லை. | |
| iv. | நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இ.மி.ச. இடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 197.6 மில்லியன் தொகையான பெ.சே.வரி (VAT) மற்றும் ஏனைய பெறப்பட வேண்டியவை இ.மி.ச. ஆல் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில் லை. மேலும், இ.மி.ச. இவற்றை அதன் நிதிக் கூற்றுக்களில் பொறுப்பாக அங்கீகரித்தரிக்கவுமில்லை. எனவே, அவற்றின் சரியான மற்றும் முழுமைத் தன்மையை கணக்காய்வில் திருப்திகரமாக உறுதிப்படுத்த முடியவில்லை. | செலுத்த வேண்டிய தொகையை இறுதி செய்ததன் பின்னர் மீதி உறுதிப்படுத்தலை உரிய நேரத்தில் லங்கா நிலக்கரி கம்பனிக்கு (LCC) அனுப்பிவைக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இ.மி.ச. உடன் கலந்தாலோசித்த பின்னர் இந்த விடயத்தை கம்பனி துரிதமாக தீர்த்தல் வேண்டும். |
| v. | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 22.5 மில்லியன் தொகையான முகாமைத்துவக் கட்டணம் 3 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையில் உள்ளது. இருப்பினும், இது தொடர்பில் ஐயப்பாட்டிற்காக எந்தவொரு ஏற்பாடும் நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 யூன் 17 அன்று LVPP மின் உற்பத்தி நிலைய முகாமையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின்படி, இ.மி.ச. உடனான வணிக கொடுக்கல் வாங்கல்களிற்காக அனைத்து செலவும் செய்யப்பட்டது." எனக் குறிப்பிட்டு 2016, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிற்காக பெற வேண்டிய நிலுவையிலுள்ள நிர்வாகக் கட்டணத்திற்கான நியாயத்துவக் கடிதத்தை அனுப்புமாறு AGM (G) அவர்கள் LCC இனைக் கோரினார். | நீண்டகாலமாக நிலுவையிலுள்ள பெற வேண்டியவை தொடர்பில் கம்பனி ஏற்பாடொன்றை செய்தல் வேண்டும். |
| vi. | கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, 2016 செப்தெம்பர் 19 முதல் 2018 ஏப்ரல் 09 வரையிலான கால கட்டத்தில் நிலக்கரி இறக்குமதியின் சரியான கொடுக்கல் வாங்கல் | இலங்கை சுங்கம் நடத்திய விசாரணையின் படி, 2016.09.19 முதல் 2018.04.09 வரையிலான காலகட்டத்தில் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியின் சரியான கொடுக்கல் வாங்கல் பெறுமதிகளை லங்கா கோல் கம்பனி வெளிப்படுத்தி யிருக்கவில்லை. | கம்பனி இந்தக் கொடுப்பனவைத் தண்டப் பணமாக பதிவு செய்வதுடன் இந்தக் கொடுப்பன வுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகா |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியை அறிவிக்காதது குறித்து ரூபா 205 மில்லியன் தொகையை கம்பனி இலங்கை சுங்கத்திற்கு தண்டமாக செலுத்தியிருந்தது. 2019 இல் கம்பனி செலுத்திய தண்டத் தொகையினை குறித்த ஆண்டிற்கான செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக இலங்கை சுங்கத்தின் வெற் (VAT) கணக்கிற்கும், வெற் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் சீஎஸ்சீஎல் பொறுப்புக் கணக்கிற்கும் தவறுதலாக வரவு வைத்திருந்தது. அதன் விளைவாக, நிறுத்திவைத்த உழைப்புக்கள் ரூபா 205 மில்லியன் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் இலங்கை சுங்கத்தின் வெற் கணக்கு, வெற் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் சீஎஸ்சீஎல் பொறுப்புக் கணக்கு என்பன முறையே ரூபா 158.2 மில்லியன் ரூபா 40 மில்லியன் மற்றும் ரூபா 6.8 மில்லியன் தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டுள்ளன. | அக்காலத்தில் அனைத்து சுங்க விடயங்களையும் சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் (சி.எஸ்.சி) கையாண்டிருந்ததுடன் அதற்காக ஒரு கப்பலேற்றலுக்கு ரூபா 1,000,000 கட்டணம் வசூலித்திருந்தது. மேற்படி தவறான வெளிப்படுத்தலுக்காக இலங்கைச் சுங்கம் எல்சிசி இற்கு ரூபா 205,000,000 அபராதம் விதித்ததுடன் இலங்கைச் சுங்கத்தின் விசாரணை அதிகாரிகள் எல்சிசி அதிகாரிகளுக்கு இந்த கட்டணத்திற்குப் பின்னர் இறுதி வெற் கட்டணம் எதனையும் செலுத்தத் தேவையில்லை என்று தெரிவித்திருந்தனர். மேலும், மேற்குறிப் பிட்ட தவறான வெளிப்படுத்தலின் காரணமாக ரூபா 6,843,417.00 உண்மை யான அபராதத்தை LCC இனங்கண்டிருந்ததுடன் அது CSC பொறுப்புக்கு எதிராகப் வரவு வைக்கப்பட்டது. | ரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| vii. | டவுரியன் அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பனி லிமிடெட் (TISCL) இலிருந்து அறவிடப்ப டாது நீண்டகாலமாக நிலுவை யில் உள்ள ரூபா 539.1 மில்லியன் தொகையினை சிலோன் ஷிப்பிங் கார்ப்ப ரேஷன் லிமிடெட் (CSCL) இன் ஊடாக அறவிடுவதற்கு கம்பனி உரிய நடவடிக்கை எடுத்திருக்காததுடன் நட்டக் கடனுக்காக எவ்வித ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவுமில்லை. மேலும், TISCL/CSCL என்பன நிலுவைத் தொகையை உறுதிப்படுத்தியிருக்கவில்லை. ஆகையால், மேற்படி மீதியின் சரியான தன்மை மற்றும் காணப்படு தன்மையினை கண்டறிய முடிந்திருக்கவி ல்லை. | தௌரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் தீர்ப்பனவுகள் ஒரு உயர் மட்டக் குழுவால் கையாளப்பட்டது. இக்கடன் ஐயக்கடன் என்பதாக குழு கருத்து தெரிவிக்காததுடன் நிலக்கரியை வழங்கு வதன் மூலம் நிலுவைத் தொகையை தீர்ப்பதற்கு கொள்வனவாளர் கூட ஒப்புக் கொண்டுள்ளார். எங்கள் வசம் உள்ள தகவல்களின்படி, இதனைத் தீர்மானிப்ப தற்காக அமைச்சரவைக்கு தீர்வுத்திட்ட முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டு ள்ளது. சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் இடமிருந்து (தௌரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் கம்பனி லிமிடெட்) பெற வேண்டிய நிலுவைத் தொகையின் தற்போதைய நிலை அமைச்சரவைக்கு தெரிவிக்கப்பட் டுள்ளதுடன் தௌரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் கம்பனியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக திறைசேரி (தலைவர்), சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன், லக்விஜய மின் உற்பத்தி நிலையம் மற்றும் லங்கா கோல் கம்பனி ஆகியவற்றின் நான்கு உறுப்பினர்களை | அறவிடுதல் செயல் முறையை துரிதப்ப டுத்த கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அமைச்சரவை நியமித்திருந்தது. மேலும், குழுவின் பரிந்துரைகளை துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சு மூலம் மீண்டும் அமைச்சரவையில் சமர்ப்பிக்க அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளதுடன் அது இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. | |
| viii. நோபல் ரிசோர்சஸ் இன்டர் நேஷனல் பிரைவேட் லிமிடெட் இடமிருந்து பெறத்தக்க ரூபா 1.1 மில்லியன் வியாபாரக் கடன் கொடுத்தோர் - என்ற வகையில் நோபல் ரிசோர்ச்சஸ் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் இடமிருந்து பெறவேண்டிய ரூபா 85.9 மில்லியன் மற்றும் லிபர்டி கொமோடிரீஸ் இடமிருந்து பெறப்பட வேண்டிய 50 சதவீத எஸ்ஜிஎஸ் கட்டணமான ரூபா 8 மில்லியன் தொகை என்பவற்றை உள்ளடக்கிய ரூபா 18 மில்லியன் தொகையான நானாவிதக் கடன்பட்டோரை மெய்மையாய்வு செய்வதற்குத் தேவையான மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் தொடர்புடைய சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை | (i) சில்லறைக் கடன்பட்டோர் ரூபா 18,075,802<br><br>அறவிட முடியாத NBT மற்றும் PAL இன் தொகை ரூபா 17,839,949 ஆகுமென ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்தது. மூலாதாரம்/மூலம் ஆகியவற்றைக் கண்டறிய மேலும் ஆராயப்பட்டு வருகின்றது.<br><br>(ii) பெறத்தக்கவை- ரூபா 1,115,987<br><br>நோபல் ரிசோர்சஸ் இற்காக ரூபா 85,887,776 செலவு மீதி காணப்படுவதுடன் அதற்கு எதிராக இந்த கடன்பட்டோர் மீதியை எதிரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>(iii) வியாபார கடன்கொடுத்தோர் - ரூபா 85,887,776<br><br>நாணயக் கடிதத்தின் செல்லுபடியாகும் காலம் காலாவதியானதன் காரணமாக கடன்கொடுத்தோரால் குறைவாகப் பற்றிய மீதியை பிரதானமாக இத்தொகை கொண்டுள்ளது.<br><br>(iv) பெறப்பட வேண்டிய 50% SGS கட்டணங்கள்: ரூபா 8,048,531<br><br>2015/16 பருவத்தில் 17 கப்பல்களுக்கான வெளியேற்ற துறைமுகத்தில் விதிக்கப்பட்ட வரைவு கணக்கெடுப்பு கட்டணத்தை இது உள்ளடக்குகின்றது. இந்த விவகாரத்தில் நடுவர் தீர்ப்பு செயல்முறை இடம்பெற்று வருகின்றது. | பெறத்தக்க நிலுவைகளின் ஆதாரங்களை கம்பனி கண்டறிய வேண்டுமென்பதுடன் பெறத்தக்கவைகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் கடன் கொடுத்தோர் நிலுவைகளை உறுதிப்படுத்தி தேவையானதைச் செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| ix. கம்பனி கப்பலேற்றல் இல. 123 இற்கான சுங்க பெ.சே.வ. ஆக ரூபா 136.3 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தது. எனினும், சுங்கத்தின் படி, உண்மையான பெ.சே.வ. தொகை ரூபா 107 மில்லியன் ஆகும். எனவே, கம்பனி மேலதிகமாகச் செலுத்தியிருந்த தொகை ரூபா 29.3 மில்லியன் என்பது அவதானிக்கப்பட்டது. | சிலோன் சிப்பிங் கோர்பரேசன் இனால் மேற்கொள்ளப்பட்ட பிழையான கணிப்பீடு காரணமாக, கப்பலேற்றல் இல. 123 இற்காக இலங்கை சுங்கத்திற்கு லங்கா கோல் கம்பனி மேலதிகமாகச் செலுத்திய பெ.சே.வ. ரூபா 29,266,966 ஆகும். LCC ஏற்கனவே பணத்தை மீளப்பெறுதல் கோரிக்கையை தாக்கல் செய்துள்ளதுடன், LCC இன் நிலுவையாகவுள்ள சுங்க தீர்வைத் தொகைகளுக்கு எதிராக இத்தொகையை எதீரீடு செய்வதற்கு அல்லது திருப்பிச் செலுத்துவதற்கு ஏற்ற வழிமுறைகள் குறித்து சுங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. மீளப்பெறுதல் கோரிக்கை தீர்க்கப்படும் வரை CSC நிலுவைத் தொகைக்குச் சமமான தொகையை LCC வைத்திருக்கும். | இந்த விடயம் தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கரந்துரையாட கம்பனி துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| x. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு லங்கா கோல் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள இலங்கைக் கப்பல் கூட்டுத் தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைக்கும் அத்திகதியில் உள்ளவாறு இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனத்தால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த மீதித் தொகைக்கும் இடையே ரூபா 4 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இருப்பினும், இந்த வேறுபாட்டை கணக்கிணக்கம் செய்ய கம்பனி பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷனுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையில் உள்ள வேறுபாட்டிற்கான விடயங்களை அடையாளம் கண்டு அதற்காக ஓர் கணக்கிணக்கக் கூற்றை LCC தயாரித்தது. அவற்றில் பெரும்பாலான விடயங்கள் நியாயமான காரணங்களுக்காக LCC ஆல் பதிவு செய்யப்பட்டிருக்காததுடன் அவை குறிப்பு இல. 24 ‘‘கடப்பாடுகள் மற்றும் நிகழத்தக் கவைகள்’’ என்பதன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆண்டின் இறுதியில் நிலுவையாக காணப்படுகின்ற முரண்பாடுகள் மற்றும் அடையாளம் காணப்படாத வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கு LCC மற்றும் CSC ஆகியவை தற்போது கரந்துரையாடி வருகின்றன. | இனங்காணப்படாத வேறுபாடுகளை இனங்கண்டு அதன் படி அவற்றை பதிவு செய்தல் வேண்டும். |
| xi. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 2 மில்லியன் தொகையான செலுத்த வேண்டிய மீதித் தொகைக்குரிய மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் தொடர்புடைய சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. | மேலே குறிப்பிடப்பட்டுள்ள செலுத்த வேண்டிய கணக்குகள் (கணக்குக் குறியீட்டு இல. 20000) 2018 மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளில் செய்யப்பட்ட தவறான கணக்கீட்டுப் பதிவுகளால் ஏற்பட்டவையாகும். மேற்குறித்த பிழைகளைத் திருத்துவதற்குத் தேவையான பதிவுகளைச் செய்வதற்காக LCC இற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வு அவதானிப்பில் சேர்க்கப் படாத செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை குறித்து முகாத்துவம் கருத்து தெரிவித்துள்ளதுடன் நிலுவையின் தோற்றத்தை கம்பனி உறுதி செய்தல் வேண்டும். |

**(ஆ) லங்கா மின்சார கம்பனி (பிரைவட்) லிமிடட்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு லங்கா பிராட் பேண்ட் நெட்வொர்க் (பிரைவேட்) லிமிடெட்டின் சாதாரண பங்குகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள ரூபா 5 மில்லியன் தொகைக்கான முதலீட்டுடன் தொடர்புடைய பங்குச் சான்றிதழ்கள் கணக் காய்விற்கு கிடைத்திருக்க வில்லை. | இந்த விவகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. அவர்கள் அவ்வப்போது சில தகவல்கள்/ விளக்கங்களைக் கோரியுள்ளனர், மேலும் அந்தத் தகவல் மற்றும் தெளிவுபடுத்தல்களை வழங்க கம்பனி செயல்பட்டு வருகிறது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் இறுதி அறிவுறுத்தலின் அடிப்படையில் இந்த நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. | முதலீட்டுப் பெறும தியை அறவிடுவ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) நிராகரிக்கப்பட்ட கணக்கிலிரு ந்து மாற்றப்பட்டிருந்த வாடிக் கையாளர்களிடமிருந்து சேகரிக் கப்பட்ட இனங்காணப்படாத ரூபா 14.7 மில்லியன் தொகையான சேகரிப்புகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏனைய கடன்கொடுத்தோர் மீதியின் கீழ் காட்டப்பட்டிருந்தது. அதில் ரூபா 3 மில்லியன் மீதி 2016 இலிருந்து முன்னெடுத்து வரப்பட்டிருந்தது. | சேகரிப்பு முகவர்கள் மற்றும் வங்கிகளுடன் ஒருங்கிணைந்து திறைசேரியின் பிரிவால் இந்த நிலுவைகள் அகற்றப்பட்டு வருகின்றன. இந்த சிக்கலைத் தணிப்பதற்காக தொடர்புடைய அனைத்து முயற்சிகளையும் LECO எடுத்துள்ளது. தற்போது ரூபா 1,746,780.92 அடையாளம் காணப்பட்டு அகற்றப்பட்டுள்ளது.<br><br>மேலும், இது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும் என்பதையும், வைப்பாளர்கள் செய்த தவறுகள் மற்றும் சேகரிப்பாளர்களின் பிழைகள்/ தவறுகளால் பல வங்கிக் கணக்குகளில் அடையாளம் காணப்படாத சேகரிப்புகள் காணப்படு கின்றன என்பதையும் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். வங்கிக் கணக்கிணக்கங்கள் தயாரிக்கப்படும் போது, தொடர்புடைய சேகரிப்பாளர் களுடன் குறுக்கு பரிசோதனை செய்து இந்த அடையாளம் தெரியாத சேகரிப்புகளை நீக்கப்படும். | (i) பேரேட்டுக் கணக்குகளிலுள்ள கணக்கிணக்கம் செய்யப்படாத கொடு க்கல் வாங்கல்களை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br><br>(ii) இனங்காணப்ப டாத சேகரிப்புகளை குறைப்பதற்கு உள் ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மேம்ப டுத்த வேண்டும். |
| (iii) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை மின்சார சபை (CEB) இடமிருந்து நானாவித சேவைகளுக்காக பெறப்பட வேண்டிய மீதி ரூபா 1,343.8 மில்லியன் ஆனதுடன் இதில் நிகர கணக்கீடு மற்றும் நிகர பிளஸ் முறைகளைப் பயன்படுத்தி CEB ஆல் 2017, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட எரிசக்தி கிரய மான ரூபா 1,336.9 மில்லியன் உள்ளடங்கியிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் 4வது காலாண்டுக்கான யுஎன்டி கட்டண சீராக்கலுடன் 2021 ஆம் ஆண்டிற்கான பெறத்தக்க தொகை ஏற்கனவே சேர்க்கப்பட்டது. முன்னைய ஆண்டுகளின் நிலுவைகளைத் தீர்ப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் நடந்து வருகின்றன. | பின்வருமாறு நடவடி க்கை எடுத்தல் வேண்டும்.<br>(i) இ.மி.ச. இடமிரு ந்து மீதியை அறவி டுதல்<br>(ii) மீதி உறுதிப்படு த்தலை கணக்காய் விற்குச் சமர்ப்பித்தல் |

| | | | |
|---|---|---|---|
| | இருப்பினும், அந்தத் தொகைக் கான மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு கிடைத்திரு க்கவில்லை. மேலும், CEB அதன் நிதிக் கூற்றுக்களில் இந்தப் பொறுப்பை அங்கீகரித் திருக்கவில்லை. | | |
| (iv) | இலங்கை மின்சார சபையின் ஆரம்ப துணை மின் நிலையங்களை நிர்மாணிப்பத ற்காக பயன்படுத்திய காணிகள் மற்றும் கட்டிடங்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 206.9 மில்லியன் தொகையானது CEB யிடமிருந்து பெற வேண்டிய மீதியாக பதிவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கம்பனியின் காணிகளில் முதன்மை துணை மின் நிலையங்களை அமைப்ப தற்கும் மேற்கூறிய காணிகள் மற்றும் கட்டிடங்களைப் பயன்படுத்தியமைக்காக CEB ஆல் செலுத்த வேண்டிய கட்டணங்கள் தொடர்பாகவும் கம்பனிக்கும் CEB க்கும் இடையில் முறையான உடன்படிக்கைகள் காணப்படவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. இது பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அதன் அறிவுறுத்தல்களின் படி நடவடிக்கை எடுக்கப்படும். | இ.மி.ச. உடன் முறையான உடன் படிக்கையில் கைச்சா த்திடுவதற்கு நடவ டிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | 2021 நவம்பர் 16 ஆந் தேதியிட்ட PED/01/2021 ஆம் இலக்க அரசுக்குச் சொந்த மான நிறுவனங்களுக்கான செயல்பாட்டுக் கையேட்டுச் சுற்றறிக்கையின் பிரிவு 6.9 இன் படி, பதவழிப்பதற்காக கணக்காய்வுக் குழுவின் பரிந்துரையளித்தல் உள்ளிட்ட உரிய செயல்முறையை மேற்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்திய பின்னர் பணிப்பாளர் சபைக்கு இழப்புக்களை பதிவழிக்கலாம். எவ்வாறாயினும், கம்பனி இது சம்பந்தமாக கூறப்பட்டுள்ள செயல்முறையைப் பின்பற்றாது மாநகர சபைகள் மற்றும் மாகாண சபைகளில் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா 387.8 மில்லியன் தெரு விளக்குக்கான கடன்பட்டோர் தொகையை 2021 நவம்பர் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது. இந்த பதிவழிப்புகள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் செய்யப்பட்டன. பணிப்பாளர் சபைக்கு பதிவழித்தலை அனுப்புவதற்கு முன் கணக்காய்வுக் குழுவின் அனுமதியை பெற நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 30 அன்று வழங்கப்பட்ட பணிப்பாளர் சபையின் ஒப்புதலின் அடிப்படையில் மீளாய்வாண்டில் கம்பனி பதிவழிப்புச் செய்திருந்தது. | | |
| (vi) | ஒரு வருடத்தின் இறுதி மாதத்தில் மொத்தமற்ற வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வருமானம் தொடர்ந்துவரும் ஆண்டின் மொத்தமற்ற வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்றப்பட்ட வருமானமாக அங்கீகரிக்க பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, 2020 திசெம்பர் இல் மொத்தமற்ற வாடிக்கையாள ர்களிடமிருந்து பெறப்பட்ட வருமானம் 2021 சனவரி இல் வருமானமாக அங்கீகரிக்கப் பட்டிருந்ததுடன் இதே நடைமுறை ஏனைய ஆண்டுகளிலும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டிருந்தது. எனவே, மொத்தமற்ற வாடிக் கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வருமானத்தின் சரியான மற்றும் முழுமைத் தன்மையை சரியாக மதிப்பிட முடிந்திருக்கவில்லை. | சில்லறை (மொத்தம் அல்லாத) பட்டியல்கள் ஒவ்வொரு மாதமும் 1 ஆம் தேதி முதல் 25 ஆம் தேதி வரை விநியோகிக்கப்படுகின்றன. ஆகையால், திசெம்பர் மற்றும் சனவரி மாத நுகர்வுகள் திசெம்பர் மாத பட்டியலிடல் சுழற்சியுடன் கலந்துள்ளதுடன் அவற்றைப் இரண்டு மாதங்களுக்கு தனித்தனியாக பிரித்தெடுப்பது கடினமானதாகும். எனவே, பட்டியலிடல் தேதிகளில் உள்ள வேறுபாட்டின் காரணமாக, மொத்தம் அல்லாத சில்லறை பட்டியல் வருமானம் அடுத்த மாதத்திலேயே எப்போதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | SLFRS - 15 வாடிக்கையாளருடனான ஒப்பந்தத்திருந்து வருமானம் என்பதன் படி வருமானத்தை இனங்காண நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் (பிரைவட்) லிமிடட்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 சனவரி 01 முதல் கம்பனியின் மின்மானி உறை தொழிற்சாலையின் கட்டிடம் தேய்மானம் செய்யப்பட் டிருக்காததுடன், மின்மானி உறை தொழிற்சாலை தொடர்பான தேய்மானக் கொள்கை நிதிக்கூற்றுக்க ளிற்கான குறிப்புகளின் கீழ் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | ஸ்ரீலங்கா எனர்ஜிஸ் (பிரைவேட்) லிமிடெட்டின் மீட்டர் என்க்ளோசர் தொழிற்சாலையானது தொழிற்சாலை கட்டிடம் மற்றும் உட்செலுத்தல் இயந்திரங்கள் உட்பட இரண்டு முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளது. இந்த இரண்டில், உட்செலுத்துதல் மோல்டிங் இயந்திரங்கள் மற்றும் எஞ்சிய உபகரணங்கள் அவை பயன்படுத்துவ தற்குக் கிடைக்கக் கூடியதாக இருந்த காலத்திருந்து தேய்மானம் செய்யப்ப ட்டுள்ளன. தொழிற்சாலை கட்டிடம் மட்டுமே தேய்மானம் செய்யப்பட வேண்டுமென்பதுடன் இது சீராக்கப்பட்டு, அதற்கேற்ப 2022 நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்படும். | கணக்கீட்டு நியமத்தி லுள்ள ஏற்பாடுக ளுடன் இணங்கி ஒழுகுதல் வேண்டும். |
| (ii) | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுடன் தொடர்பு டைய இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இலுள்ள 79(ஆ) | அடுத்த நிதியாண்டில் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்களை வெளிப்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தி லுள்ள ஏற்பாடுக ளுடன் இணங்கி ஒழுகுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பந்தியின் படி, கம்பனி தொடர்ந்து பயன்படுத்தி வருகின்ற ஆனால் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மொத்த முன்கொண்டு செல்லும் தொகையை வெளிப்படுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், தொடர்ந்தும் பயன்படுத்தி வரப்படுகின்ற ரூபா 19 மில்லியன் பெறுமதியான முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மொத்த கிரயத்தை கம்பனி வெளிப்படுத்தியிருக்கவில்லை. மேலும், செயற்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட மற்றும் விற்பனைக்காக வைக்கப்பட்டவை என வகைப்படுத்தப்படாத ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் SLFRS 5 இன் படி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) நிதிக் கூற்றுக்களின் படி, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரட்டப்பட்ட வருமான வரி ஒதுக்கீடு ரூபா 40.4 மில்லியனாகவும், 2021 ஆம் ஆண்டிற்கான வருமான வரிக்கான ஏற்பாடு ரூபா 9.7 மில்லியனாகவும் இருந்தது. எவ்வாறாயினும், கம்பனி 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் விதிகள் மற்றும் அதன் திருத்தங்களின்படி வருமான வரி கணிப்பீட்டைத் தயாரித்திருக்கவில்லை. எனவே, கம்பனி மேற்கொண்டுள்ள வருமான வரி ஏற்பாட்டின் சரியான தன்மையை திருப்திகரமாக கண்டறிய முடியவில்லை. | இறுதி வருமான வரி கணிப்பீடு நடத்தப்படும் வரை வருடாந்த நிதிக் கூற்றுக்களை இறுதி செய்யும் நோக்கத்திற்காக வரிக்கு முந்தைய இலாபத்தில் இருந்து 24% வருமான வரி ஒதுக்கீடு கம்பனியின் ஆரம்பம் முதல் செய்யப்பட்டு வருகின்றது. தற்போதும் அதையே இறுதி செய்யும் பணி நடந்து வருகிறது. | உள்நாட்டு இறை வரிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகுதல் வேண்டும். |
| (iv) சரக்கிருப்பு மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS 02) இன் 37 ஆம் பந்தியின் படி, கம்பனி அதன் நிதிக் கூற்றுக்களில் சரக்கிருப்புகளின் பல்வேறு வகைப்படுத்தல்களின் | LKAS 02 இன் படி முடிவடைந்த பொருட்கள், முடிவுறா வேலைகள் மற்றும் மூலப் பொருட்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ள இருப்புகளிற்கான வகைப்படுத்தல் எனும் நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்பு இல. 06 ஐப் | சரக்கிருப்புகளை சரியாக வெளிப்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கீழுள்ள முன்கொண்டு செல்லும் தொகைகள் பற்றிய தகவல் களை வெளிப்படுத்தியிருக் கவில்லை. | பார்க்கவும். நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்பு 6. | |
| (v) ரூபா 40.4 மில்லியன் வருமான வரி ஏற்பாடுகள், 2021 ஆம் ஆண்டிற்கான விற்பனையின் மீதான ரூபா 27.7 மில்லியன் வெளியீட்டு வெற், ரூபா 595,036 செலுத்த வேண்டிய NBT தொகை, ரூபா 67,100 செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை, ரூபா 136,795 ஆன செலுத்த வேண்டிய உழைக்கும்போதே செலுத்தும் வரி மற்றும் ரூபா 28,999 ஆன பிற்போட்ட வரி சொத்துக்கள் தொடர்பான போதிய மற்றும் பொருத்தமான தகவல்கள் கணக்காய்விற்கு கிடைக்கவில்லை. மேலும் ETF, NBT, PAYE மற்றும் VAT வருமானம், வருமான வரி அறிக்கைகள், பெறப்பட்ட வரி மதிப்பீடு மற்றும் தொடர்புடைய பட்டோலைகள் காணப்படுமாயின் அவைகளும் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. | ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட VAT மற்றும் NBT கோப்புகளை தயவுசெய்து பார்க்கவும். | கணக்காய்விற்கு உரிய வேளையில் தேவையான ஆவண ங்களை சமர்ப்பிக்க வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | | பரிந்துரை |
|---|---|---|---|
| | பிரிவு | பதில் | |
| (அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 44,079 மில்லியன் வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் சாதாரண மற்றும் மொத்த வழங்கல்கள் இரண்டுடனும் தொடர்புடைய ரூபா 6,839 மில்லியன் மீதி ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் அதிலுள்ள ரூபா 2,928 மில்லியன் தொகை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தது. | DD-01 2318.21 மில்.<br>DD-02 3474.91 மில்.<br>DD-03 572.95 மில். | 2021 திசெம்பர் 31 இல் காணப்பட்ட நிலுவையில் ரூபா 4,920 மில்லியன் 2022 ஆம் ஆண்டில் அறவிடப்பட்டதுடன் சில மீதிகளை பதிவழிப்பதற்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதன்படி 2022 இல் ரூபா 8.96 மில்லியன் பதிவழிக்கப்ப ட்டது. மேலதிகமாக, அறவிடுதல் செயல் முறையை நடைமுறைப்படு த்த குழுக்கள் அமைக்க | நிலுவையிலுள்ள மீதி களை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | DD-04 473.41 மில். த.அலு. 10 மில். ப்பட்டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இ.மி.ச. இற்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக தீர்ப்பதற்கு வாடிக்கையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். | |
| (ஆ) சொத்து முகாமைத்துவப் பிரிவின் பாரந்தூக்கி, காற்றுச் சீராக்கி மற்றும் மின்வலு பிறப்பாக்கிகளை வழங்கியமைக்காக அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 83.68 மில்லியன் தொகையொன்று ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாது வைக்கப்பட்டுள்ளது. | பெறவேண்டியவற்றில் பெரும்பாலானவை அரசு மருத்துவமனைகள், மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு உரியன வாகும். கடிதங்களை அனுப்புவதன் மூலமும் பிற வழிமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலமும் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும், பெறவேண்டியவற்றை அறவிடுதல் கேள்விக்குறியாக உள்ளது. அந்த அறவிட முடியாத நிலுவைகளை பதிவழிப்புச்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவையிலுள்ள மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தவேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நொதர்ன் பவர் கம்பனி (பிரைவட்) லிமிடட் இற்குச் செலுத்த வேண்டிய ரூபா 2.9 பில்லியன் தொகை மூன்று ஆண்டுகளிற்கும் மேலாக பரிமாற்றப் பிரிவின் நிதிக் கூற்றுக்களில் வியாபார கடன் கொடுத்தோராக வைக்கப்பட்டுள்ளது. | மல்லாகம் நீதவான் நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவு காரணமாக வடக்கு மின் நிலையம் 2015-01-27 முதல் மூடப்பட்டது. எவ்வாறாயினும், இது ஒரு வலுவூட்டப்பட்ட சூழ்நிலை என்று அறிவித்து இயலளவுக் கட்டணங்களுக்காக கம்பனி மாதாந்த விலைப்பட்டியல்களை வழங்கியுள்ளது. நீதிமன்ற தீர்ப்பு நிலுவையில் இருந்ததால், இந்த விலைப்பட்டியல் பெறுமதிகளை இ.மி.ச. கணக்கிட்டுள்ளது. மின்வலு நிலையம் சுற்றுச்சூழல் சட்டத்தை மீறி இயங்குகிறது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமையால், இந்த விலைப்பட்டியல்களைத் தீர்ப்பதற்கு இ.மி.ச. இற்கு எந்தப் பொறுப்பும் இல்லை. இந்த தொகைகளை பதிவழிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் உரிய நேரத்தில் எடுக்கப்படும். | இந்த மீதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2009 இன் 20 | ஒழுங்குபடுத்தல் | 2021 இல் ஓய்வுவழங்கப்பட்ட 3 IPP | சட்டத்தில் |

| | | | |
|---|---|---|---|
| ஆம் இலக்க திருத்திய இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 7(1) மற்றும் 43(1) ஆம் பிரிவு | தரப் பிடமிருந்து அதிகார த்தைப் பெற்றுக் கொள்ளாது ரூபா 6.02 பில்லியன் பெறுமதியான 261.32 Gwh எரிசக்தி, மின் பிறப்பாக்கத்திற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத 3 சுயாதீன மின்வலு உற்பத்தியாளர் களிடமிருந்து (IPPs) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | ஆலைகள்: ஏஸ் எம்பிலிபிடிய, ஏஸ் பவர் ஜெனரேசன் மாத்தறை மற்றும் ஆசியா பவர்<br>நாட்பட்ட IPP மின் நிலையங்களில் இருந்து மின்சக்தியை கொள்வனவு செய்வதற்காக எந்தவொரு பரிமாற்றல் அனுமதிப்பத்திரத் தையும் பெறுவதற்கு, 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் (மின்சாரச் சட்டம்) பிரிவு 7 (1) அல்லது 43 (1) இல் தடைகளும் இல்லை. இந்த மூன்று நாட்பட்ட IPP மின் நிலையங்களின் காலாவதியான மின்வலு கொள்வனவு ஒப்பந்தங்களை (பிபிஏ) நீடிக்க இ.மி.ச. பியூசிஎஸ்எல் இன் ஒப்புதலை கோரியதுடன் கால நீடிப்புச் செய்யப்பட்ட பிபிஏக்களை அதன் ஒப்புதலுக்காக சமர்ப்பித்தது.<br><br>மின்சாரச் சட்டத்தின் பிரிவு 24 (1) (உ) இன் கீழுள்ள இ.மி.ச. இன் (பரிமாற்றல் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்) கடமைக்கு இணங்க எதிர்வுகூறப்பட்ட மின்சாரத் தேவையினை பூர்த்தி செய்வதற்கு போதியளவு மின்சார இயலளவு காணப்படுவதனை உறுதி செய்வதற்காக இ.மி.ச. இந்த மின் நிலையங்களின் பிபிஏ களை காலநீடிப்புச் செய்தல் வேண்டும். மின் வெட்டு ஏதேனும் விதிக்கப்பட்டால், தொழிற்சாலைகள்/ ஹோட்டல்கள் மற்றும் வணிக கட்டிடங்களுக்கு மின்சக்தி வழங்கப்படா ததன் காரணமாக நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கத்தை இ.மி.ச. மேலும் கருத்தில் கொண்டது. அமைச்சரவையின் அங்கீகாரத் துடன் இ.மி.ச. இதனை செய்துள்ளது. | சொல்லப்பட்ட தேவைப்பாடு களுடன் இண ங்குவதுடன் பொதுப் பயன் பாட்டு ஆணைக்குழு விடமிருந்து மின்வலு கொள்வனவுக் கான அனுமதி பெறப்படுதல் வேண்டும். |
| (ஆ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 46 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 11(அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | 1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் உள்ளவாறான மொத்தம் நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியில் 0.1 சதவீதப் பங்களிப்பு காப்புறுதி பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டும் என குறிப்பிடப்பட் டிருந்த போதிலும் அந் நிதியத்தில் 2021 | இ.மி.ச. பல ஆண்டுகளாக மோசமான திரவத்தன்மை சூழ்நிலையை சந்தித்துள்ளமையால் காப்பீட்டு முதலீட்டு எஸ்க்ரோ கணக்கில் முதலீடு செய்யாததால் இந்த வேறுபாடு முக்கியமாக எழுந்துள்ளது. கடந்த 8 ஆண்டுகளில் எரிபொருள் மற்றும் நிலக்கரி விலைகள் அதிகரித்திருந்தமையால் மின் பிறப்பாக்கக் கிரயங்கள் அதிகரித்த போதிலும், மின் கட்டணங்களில் திருத்தங்கள் செய்யப்படவில்லை. இருப்பினும், இ.மி.ச. இன் நிதி நிலைமை மற்றும் திரவ நிலைமை மேம்படுத்தப்பட்டவுடன் காப்பீட்டு நிதிய முதலீட்டு கணக்கில் மொத்த நிலையான | சட்டத்தில் சொல்லப்பட்ட தேவைப்பாடு களுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,657 மில்லியன் தொகையை மாத் திரம் இ.மி.ச. முத லீடு செய்திருந் தது. கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் படி, 2021 ஆம் ஆண்டில் ரூபா 852.87 மில்லி யன் தொகை மேலதி கமாக முதலீடு செய்யப்படுதல் வேண்டுமென்பது வெளிப்படுத்தப்பட்டது | சொத்துகளில் 0.1% க்கு சமமான முதலீட்டை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) பொது முயற் சிகள் திணைக் களத்தினால் வழங்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான தொழில் முயற் சிகளுக்கான 2022 நவம்பர் 16 ஆந் திக திய செயற் பாட்டுக் கையேட்டின் 3.5 ஆம் பிரிவு | ஏற்பாடுகளுக்கு முரணாக, அவ்வப் போது வரிசை அமை ச்சுக்கும் சேமலாப நிதியத்துக்கும் விடுவிக்கப்பட்டிருந்த 65 ஊழியர்களிற்காக ரூபா 105.22 மில்லி யன் தொகையினை ஆண்டிற்கான சம்பள மாகவும் ஏனைய கொடுப்பனவுகளாக வும் சபை செலுத்தி யிருந்தது. | ஊழியர்களை விடுவிக்குமாறு வரிசை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளை இ.மி.ச. இற்கு நிராகரிக்க முடியாதுள்ளமையால், ஏற்பட்டுள்ள செலவினத்தை இ.மி.ச. இனால் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. இருப்பினும், அமைச்சுக்கு விடுவிக்கப் பட்டுள்ள ஊழியர்கள் சார்பாக இ.மி.ச. செலுத்திய சம்பளங்கள் மற்றும் ஏனைய நலன்களை மீளளிப்புச் செய்யுமாறு கோரி ஒரு கடிம் மின்வலு அமைச்சிற்கு இ.மி.ச. இன் பொது முகாமையாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | செயற்பாட்டுக் கையேட்டிலு ள்ள தேவை ப்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஈ) பொது முயற்சி கள் திணைக் களத்தினால் 1994 யூன் 14 ஆந் திகதி வழங்கப்பட்ட 95 ஆம் இல க்க சுற்றறி க்கை மற்றும் அமைச்சின் கணக்காய்வுக் குழுவில் 2020 செப்தெம்பர் 25 அன்று எடுக்கப் பட்ட தீர்மானம் | ஏற்பாடுகள் மற்றும் தீர்மானங்களிற்கு முரணாக ரூபா 1.2 பில்லியன் தொகை 2020 ஆம் ஆண்டில் விடுமுறை காசாக் கல் என்ற வகையில் செலுத்தப்பட்டிருந்தது | 2022.07.14 ஆந் திகதிய 03/2022(I) ஆம் இலக்க PED சுற்றறிக்கைக்கு அமைவாக 2022 இற்கான பயனபடுத்தப்படாத விடுமுறை களின் காசாக்கல் கொடுப்பன வை நிறுத்துவதற்கு சபை தீர்மானித்தது. | சுற்றறிக்கையி லுள்ள ஏற்பா டுகளுடன் இணங்குதல் வேண்டும். |
| (உ) 1958 இன் 15 ஆம் இல | ஏற்பாட்டுக்கு முர ணாக, உழைப்புக் | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் பிரிவு 47 இன் | ஊழியர் சேமலாப நிதி |

| | | | |
|---|---|---|---|
| க்க ஊழியர் சேமலாப நிதி சட்டத்தின் 47 ஆம் பிரிவு | களை கணிப்பிடுகை யில் எக்சோடஸ் கொடுப்பனவு, முதுமானிப் பட்டக் கொடுப்பனவு மற்றும் உயர்தொழில் கொடுப்பனவு / பகுதி உயர் தொழில் கொடுப்பனவு ஆகியவற்றிலிருந்து ஆகக்கூடிய கொடுப் பனவை சபை கருத்தில் கொண்டிரு ந்ததுடன் அதன் அடிப்படையில் ஊ.சே.நி. உதவு தொகை செலுத்தப்ப ட்டிருந்தது | துணைப்பிரிவு (ஊ) இன் படி, ஊழியர் சேமலாப நிதிக்கு செலுத்த வேண்டிய தொகையை கணக்கிடுவதற்காக ”பரிந்துரைக்கப்படக்கூடிய ஏனைய வகையான ஊதியங்கள்” பயன்படுத் தப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது. இந்த விதிக்கு இணங்க, ஊழியர் சேமலாப நிதிக்கான வருவாயைக் கணக்கிடும்போது, வருகைக் கொடுப்பனவு, முதுகலை பட்டப்படிப்பு கொடுப்பனவுகள் அல்லது தொழில்முறை கொடுப்பனவு / அரை-தொழில்முறை கொடுப்பனவுகளில் மிக உயர்ந்ததைக் கருத்தில் கொள்ள பணிப்பாளர் சபை தீர்மானித்தது. அதன்படி, இது சட்டத்திற்கு எதிரானது அல்ல. | சட்டத்தின் படி, ஊ.சே.நி. இற்கான சம்பளத்திற்கு வாழ்க்கைச் செலவுப் படி மாத்திரம் சேர்க்கப்பட வேண்டும். ஆகையால், இந்த நடை முறை சட்டத் திற்கு முரணா னது என்பது டன் சட்டத் தில் சொல்ல ப்பட்ட ஏற்பாடு களுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஊ) வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடட் உடன் 2007 சனவரி 10 ஆந் திகதி கைச்சாத்திட்ட மின்வலு கொள்வனவு உடன்படிக்கை யின் 6.1.3 ஆம் பிரிவு | 220kv வலுவில் சபையினால் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடட் இற்கு வழங்கப்பட்ட மின்சக்தியானது 220kv வலுவில் வழங்கப்படுவ தற்கு எந்த விதிமுறைக ளும் நிபந்தனை களும் இல்லை என்றால், அத்தகைய விநியோகத்தின் போது சபை அறவிடு கின்ற விலை மின்சக்திக்கான கிரய த்தில் காணப்படுதல் வேண்டும். இந்த விதிமுறைக்கு மாறாக, கம்பனிக்கு சபையினால் வழங் கிய மின் சக்தி கட்டண வீதத்தை கணிப்பிடுகையில் இயலளவுக் கட்டணம் மற்றும் பிற கட்டண ங்களை கருத்தில் கொள்ளாமல் எரிசக்தி கட்டண | கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்திலுள்ள வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் 220 kV மின்னழுத்த மட்டத்தில் இ.மி.ச. இன் வலைப்பின்னலுடன் இணைக்கப்பட்டுள்ள துடன் அதே மின்னழுத்த மட்டத்தில் மின் மானி அளவீட்டு முறைமை நிறுவப்பட்டுள்ளது. 2021-12-16 ஆந் தேதியிட்ட AGM (DD 2) கடிதத்தின் மூலம் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் இனை டிரான்ஸ்மிஷன் வாடிக்கையாளராகக் கருதுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டது. இது தொடர்பாக 2022-01-24 அன்று DGM (EM) கிளையில் இந்த விடயத்தைப் பற்றி கலந்துரையாட ஒரு கூட்டம் நடத்தப்பட்டதுடன், அக்கூட்டத்தில் பின்வருமாறு முடிவு செய்யப்பட்டது,<br><br>அ) இப்போது நடைமுறையிலுள்ள எதிரீடு செய்தல் முறையைப் பின்பற்றுவதற்கு வழங்கப்பட்ட உத்தரவுகளைத் தேடுதல் மற்றும்;<br><br>ஆ) சம்மந்தப்பட்ட முழு காலத்திற்குமான எதிரீடு செய்தல் முறை மற்றும் I3 கட்டணத்திலிருந்து இ.மி.ச. ஆல் வெஸ்ட் கோஸ்ட் இற்கு விதிக்கப்படும் கட்டணங்களை ஒப்பிடுதல்.<br><br>மின்சார கொள்முதல் உடன்படிக்கையின் | உடன்படிக் கையில் சொல்லப்பட்டு ள்ள தேவைப் பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | த்தை மட்டுமே சபை கருத்தில் கொண்டி ருந்தது. | பிரிவு 6.1.3 இன் படி, 2014-11-12 ஆந் தேதியிட்ட AGM (கூட்டிணைப்பு உபாயம்) கடிதத்தின் மூலம், இ.மி.ச. இல் இருந்து நுகரப்படும் மின்சார சக்தியின் எதிரீட்டை, வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் இற்கு செலுத்த வேண்டிய எரிசக்தி கட்டணத்தில் இருந்து மட்டுமே ஈடுசெய்ய முடியும். அந்த திசையில் இருந்து இ.மி.ச 2014 ஒக்தோபர் முதல் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் மின் உற்பத்தி நிலையத்தால் இறக்குமதி செய்யப்படும் எரிசக்தியின் அளவை இ.மி.ச. எதிரீடு செய்யத் தொடங்கியது.<br>ஒப்பீட்டின்படி, I3 கட்டண முறையின் ஊடாக சம்பந்தப்பட்ட முழு காலத்திற்கும் இ.மி.ச. ஆல் வெஸ்ட் கோஸ்ட்டிற்கு விதிக்கப்பட்ட கட்டணத் தொகையை காட்டிலும் எதிரீடு செய்தல் தொகையானது அதிகமாகும். எனவே, தற்போது டிரான்ஸ்மிஷன் பிரிவால் மேற்கொள்ள ப்பட்டு வருகின்ற முறையைத் தொடர்வதற்கும், வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட்டை டிரான்ஸ்மிஷன் வாடிக்கையாளராகக் கருதுவதற்கும், அங்கீகரி க்கப்பட்ட டிரான்ஸ்மிஷன் வாடிக்கையாளர் கட்டணம் கிடைக்கும் பட்சத்தில் டிரான்ஸ்மிஷன் பிரிவுக்கு அதனை மாற்றுவதற்கும் தீர்மானிக்கப் பட்டது. | |
| (எ) 2018 ஒக்தோ பர் 03 ஆந் திகதி அமைச்ச ரவை தீர்மா னம் | அரசாங்க நிறுவனங் களிற்கு சொந்தமான தயார் நிலையிலுள்ள மின்பிறப்பாக்கிகளை பயன்படுத் துவதன் மீதான அமைச்ச ரவை தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது. | பல்வேறு காரணங்களால் மேற்படி தீர்மானம் இதுவரை அமுல்படுத்தப்ப டவில்லை. | அமைச்சர வைத் தீர்மா னத்துடன் இணங்குவத ற்கு நடவடி க்கை எடுத் தல் வேண் டும். |
| (ஏ) 2021 நவம்பர் 21 ஆந் திக திய அரசாங்க தொழில் முயற் சிகளிற்கான கையேட்டின் 5.1 ஆம் பிரிவு | சபை தொடர்ச்சியாக நட்டம் ஈட்டிவருகின்ற போதிலும், வரைவு கூட்டு உடன்படிக்கை யின் அடிப்படையில் சபை மீளாய்வாண் டின் போது ரூபா 2.7 பில்லியன் தொகை யினை உபகாரச் சம்பளமாக செலுத் தியிருந்தது. | 2021 ஆம் ஆண்டுக்கான போனஸ் வழங்குவது தொடர்பாக தொழிற்சங்கங்க ளிடமிருந்து இ.மி.ச. இன் முகாமைத்து வத்திற்கு கிடைக்கப்பெற்ற பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில், இதற்காக பணிப்பாளர் சபையிடம் 2021 திசெம்பர் 06 அன்று முகாமைத்துவம் ஆலோசனையைக் கோரியது இதன் விளைவாக, போனஸ் செலுத்த சபை தீர்மானித்து அதனை 2021 திசெம்பர் 17 அன்று இ.மி.ச. இன் GM இற்குத் தெரிவித்தது. அதன்படி, சபையின் | செயற்பாட்டுக் கையேட்டிலு ள்ள தேவைப் பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | தீர்மானத்திற்கு அமைய இ.மி.ச. இன் GM இனால் போனஸ் செலுத்துவதற்கான ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. |

### 1.8 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உழைக்கும் போதே செலுத்தும் (பிஏவைஈ) வரி / முற்பண தனிப்பட்ட வருமான வரிப் பொறுப்பை ஊழியர்களுக்கு மாற்றுவதற்காக 2015 மே 20 இல் கூட்டு உடன்படிக்கையை கருத்தில் கொள்ளும் போதும் 2007 திசெம்பர் 13 இல் சம்பள மீளாய்வின் போதும் அமைச்சரவை தீர்மானங்களை எடுத்திருந்தது. எனினும் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானங்களுக்கும் 3/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக் களத்தின் சுற்றறிக்கைக்கும் முரணாக 2010 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியின் போது உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரியை / முற்பண தனிப்பட்ட வருமான வரியை கழிக்காமல் சபை அதன் சொந்த நிதியிலிருந்து ரூபா 4.98 பில்லியன் தொகையை அவ்வாறு செலுத்தியிருந்தது. | 2020 நவம்பர் மாதம் முதல், இ.மி.ச. இன் ஊழியர்களால் உயர்தர தனிப்பட்ட வருமான வரி (ஏபிஐரீ) செலுத்தப்படுகின்றது. | அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல் களுடன் இணங்குதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான தொழிற்பாடுகள் ரூபா 6,016 மில்லியன் நட்டத்தை விளைவித்திருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 51,530 மில்லியன் ஆகும். ஆகையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 45,514 மில்லியன் முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. நீர்மின்சார உற்பத்தி 45 சதவீதத்தினால் அதிகரித்தமையால் மின்வலு மற்றும் எரிபொருள் கொள்வனவு என்பன முறையே 22 சதவீதம் மற்றும் 19 சதவீதத்தால் குறைவடைந்தமையே இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாகும்.

### 2.2 போக்கின் மீதான பகுப்பாய்வு

#### (அ) மின்வலு உற்பத்தி

நாட்டிற்கு குறைந்த கிரயத்தில் மின்சாரத்தை விநியோகிப்பது இ.மி.ச. இன் பிரதான நோக்கமாக உள்ள போதிலும் மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகளிலுள்ள சாதகமற்ற நிபந்தனைகள், அனல் மின்வலு உற்பத்திக்காக ஏற்பட்ட உயர் கிரயம் மற்றும் காற்று மற்றும்

ஏனைய மாற்றலற்ற புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களிலிருந்தான குறைந்த பங்களிப்புக் காரணமாக சீஈபீயால் இந் நோக்கத்தை அடைய முடியாதிருந்தது.

மேலும் இ.மி.ச. இன் நீண்டகால உற்பத்தித் திட்டம் மற்றும் பரிமாற்றல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதில் குறிப்பிடத்தக்களவு தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. இதன் விளைவாக இ.மி.ச. அவசர மின்வலுக் கொள்வனவுகளை மேற்கொண்டிருந்தமையால் இ.மி.ச. இன் ஆகக் குறைந்த கிரய நோக்கத்தை மோசமாக பாதித்திருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு 2021 ஆம் ஆண்டிற்கான மின்வலு உற்பத்தி நிலைமை கீழே தரப்பட்டுள்ளது.

| **மூலம்** | **2021** | **2020** | **அதிகரிப்பு /(குறைவு)** | |
|---|---|---|---|---|
| | **GWh** | **GWh** | **GWh** | **%** |
| ---------------- | ----------- | ------------- | ----------- | ------------ |
| நீர்மின் | 7,208 | 4,958 | 2,250 | 45 |
| அனல்மின் | 2,631 | 4,179 | (1,548) | (37) |
| நிலக்கரி | 5,519 | 5,754 | (235) | (4) |
| காற்று | 645 | 332 | 313 | 94 |
| ஏனைய மாற்றலற்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி | 163 | 100 | 63 | 63 |
| தளத்துடன் இணைக்கப்பட்ட சூரியசக்தி | 156 | 118 | 38 | 32 |
| கூரைக்கு மேலான சூரியசக்தி | 389 | 269 | 120 | 45 |
| சிறிய தீவுகள் | 2.7 | 2.6 | 0.1 | 4 |
| | -------- | ------- | --------- | ------ |
| **மொத்தம்** | **16,713.7** | **15,712.6** | **1,001.1** | **6** |
| | ===== | ===== | ===== | === |

அதற்கமைய நீர், காற்று, ஏனைய மாற்றமுடியாத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வலையமைப்புடன் இணைக்கப்பட்ட சூரியசக்தி மற்றும் கூரைக்கு மேலான சூரியசக்தி மின்சாரம் என்பன மீளாய்வாண்டில் முறையே 45 சதவீதம், 94 சதவீதம், 63 சதவீதம், 32 சதவீதம் மற்றும் 45 சதவீதத்தினால் அதிகரித்திருக்க நாட்டில் நிலவிய சாதகமான காலநிலை காரணமாக அனல், காற்று மற்றும் அனல் மற்றும் நிலக்கரி மின்வலு உற்பத்தி என்பன முறையே 37 சதவீதம் மற்றும் 4 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

**(ஆ) நேர்க் கிரயம் (வழங்கல் மற்றும் பரிமாற்றல் கிரயம் தவிர்ந்த)**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டிற்கான நேர்க் கிரயப் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

| **விடயம்** | **2021** | **2020** | **அதிகரிப்பு / (குறைவு)** |
|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **சதவீதம் %** |
| எரிபொருள் | 24,373 | 30,195 | (19.28) |
| நிலக்கரி | 47,311 | 42,805 | 10.52 |
| மின்வலுக் கொள்வனவு | 85,690 | 110,213 | (22.25) |
| செயற்பாடு மற்றும் பராமரிப்பு | 64,172 | 61,793 | 3.8 |

| | | | |
|---|---|---|---|
| பெறுமானத்தேய்வு | 32,907 | 31,932 | 3 |
| | ----------- | ---------- | -------- |
| **மொத்த நேர்க் கிரயம்** | **254,453** | **276,938** | **(8.12)** |
| | ====== | ====== | ==== |

மேற்படி தகவல்களின் படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது குறைந்த செலவுடைய எரிசக்தி மூலங்களிலிருந்தான மின்சார உற்பத்தி (நீர்மின்சாரம், காற்று, ஏனைய மாற்ற முடியாத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தளத்துடன் இணைக்கப்பட்ட சூரியசக்தி மற்றும் கூரைக்கு மேலான சூரியசக்தி) அதிகரித்தமையின் விளைவாக எரிபொருள் கிரயங்கள் மற்றும் எரிசக்தி கொள்வனவுக் கிரயங்கள் முறையே 19.28 சதவீதம் மற்றும் 22.25 சதவீததத்தால் குறைவடைந்திருந்தன. இருப்பினும், நிலக்கரியின் மூலமான மின்சார உற்பத்தி 4 சதவீதத்தினால் குறைவடைந்திருந்த போதிலும், நிலக்கிரி விலையின் அதிகரிப்பு காரணமாக நிலக்கரிக் கிரயம் 10.52 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

### 2.3.1 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொழிற்படு மூலதன நிலைமை ரூபா 76,634 மில்லியன் எதிர்மறைப் பெறுமதியாக இருந்த அதேநேரம் முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறு இது ரூபா 72,109 மில்லியன் நேர்மறைப் பெறுமதியாக இருந்தது. ஆகையால் மீளாய்வாண்டின் தொழிற்படு மூலதனம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6 சதவீதத்தால் பின்னடைவு கண்டிருந்தது.

### 2.3.2 உரிமை மூலதனத்திற்கான கடன்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குழுமத்தின் உரிமை மூலதன மீதியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 3 சதவீதத்தால் அல்லது ரூபா 10,517 மில்லியனால் அதிகரித்திருந்தது. மேலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குழுமத்தால் ஈடுபடுத்தப்பட்ட மொத்த மூலதனத்தில் 47 சதவீதம் அல்லது ரூபா 427,653 மில்லியன் கடன்களினூடாக நிதியிடப்பட்டிருந்தது. அத்துடன், குழுமத்தின் உரிமை மூலதனத்திற்கான கடன் விகிதம் முன்னைய ஆண்டின் 123 சதவீதத்திலிருந்து 2021 இல் 125 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

### 2.3.3 இலாபத்தன்மை

2020 ஆம் ஆண்டிற்கான ரூபா 21.67 ஆன அலகு ஒன்றிற்கான சராசரிக் கிரயத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் இது ரூபா 18.63 ஆக இருந்ததுடன் அலகொன்று ரூபா 16.37 சராசரி விலையில் விற்பனை செய்யப்பட்டது (முன்னைய ஆண்டுச் சராசரி விற்பனை விலை அலகொன்றிற்கு ரூபா 16.72 ஆக இருந்தது). அதற்கிணங்க, மீளாய்வாண்டின் அலகொன்றுக்கான மொத்த நட்டம் ரூபா 2.26 ஆக இருந்ததுடன் அலகொன்றுக்கான ரூபா 4.95 ஆன முன்னைய ஆண்டுச் சராசரி மொத்த நட்டத்துடன் ஒப்பிடும் போது இது 54.34 சதவீத குறைவொன்றாகக் காணப்பட்டது. பின்வரும் அட்டவணையானது கட்டண வகைப்படுத்தலையும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் விநியோகிக்கப்பட்ட மின்சாரத்தின் அலகொன்றிற்கான (kWh) பங்களிப்பையும் காட்டுகின்றது.

| | **2021** | | **2020** | |
|---|---|---|---|---|
| **வுகை** | **அலகொன்றின் பங்களிப்பு (kWh)** | **மொத்தப் பங்களிப்பு ரூபா மில்லியன்** | **அலகொன்றின் பங்களிப்பு (kWh)** | **மொத்தப் பங்களிப்பு ரூபா மில்லியன்** |
| உள்நாடு | (3.72) | (19,485.36) | (6.81) | (34,662.90) |
| மதத்தலங்கள் | (11.46) | (928.26) | (14.45) | (1,184.90) |
| பொது நோக்கம் | 5.09 | 14,745.73 | 2.26 | 6,411.62 |
| ஹோட்டல் | (0.86) | (189.20) | (3.57) | (689.01) |

| | | | | |
|---|---|---|---|---|
| கைத்தொழில் | (3.96) | (19,095.12) | (6.83) | (28,440.12) |
| அரசாங்கம் | (0.31) | (70.06) | (3.60) | (748.80) |
| எல்ஈசீஓ இற்கான மொத்த வழங்கல்கள் | (4.59) | (7,495.47) | (5.64) | (9,052.20) |
| வீதி விளக்குகள் | (18.61) | (1,805.17) | (21.64) | (2,337.12) |
| | -------- | -------------- | ---------- | -------------- |
| **மொத்தம்** | **(2.26)** | **(34,383.64)** | **(4.95)** | **(70,720.65)** |
| | ==== | ======== | ===== | ======= |

விற்பனை செய்யப்பட்ட மொத்த அலகுகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், பொது நோக்கத்தின் கட்டண வகைப்படுத்தல் மாத்திரமே மீளாய்வாண்டின் மொத்தப் பங்களிப்பிற்கு நேர்க்கணியப் பங்களிப்பாளராக இருந்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 130 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. கைத்தொழில் மற்றும் உள்நாட்டு வகைப்படுத்தல் மீதான கட்டணம் மீளாய்வாண்டிற்கான மொத்தப் பங்களிப்பிற்கு ஆகக்கூடிய எதிர்க்கணியப் பங்களிப்பாளராக இருந்ததுடன் மதத்தலங்கள், ஹொட்டேல், அரசாங்கம், எல்ஈசீஓ இற்கான விற்பனைகள் மற்றும் வீதி விளக்குகள் மீதான கட்டணமும் அதற்குரிய சாதகமற்ற பங்களிப்புக்களை காட்டியிருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018-2037 வரையான நீண்ட கால மின்பிறப்பாக்கத் திட்டத்தின் படி, சீதாவ கங்கை நீர் மின்வலு செயற்திட்டம் 2022 க்குள் தொடங்கப்படுதல் வேண்டும். செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு (பிஎம்யு) 2016 செப்டம்பர் இல் நிறுவப்பட்டதுடன் சாத்தியக்கூறு ஆய்வு, விரிவான வடிவமைப்பு மற்றும் கேள்விமனு ஆவணங்களின் வரைபினைத் தயாரித்தல் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த செயற்திட்டத்திற்காக 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 301.19 மில்லியன் கிரயம் ஏற்பட்டிருந்தது. இருப்பினும், நிதிப் பிரச்சினை காரணமாக 2020 திசெம்பர் 20 அன்று நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கு சபை தீர்மானித்தது. மேலும், மேற்குறித்த செயற்திட்டத்தை ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (பிரைவேட்) லிமிடெட் மூலம் அபிவிருத்தி செய்வதற்கு 2021 பெப்ரவரி 23 அன்று தீர்மானிக்கப்பட்டதுடன். இந்த ஒப்பந்தத்தை எஸ்எல்இக்கு ”ஒற்றை மூல கொள்வனவு” என்ற அடிப்படையில் வழங்குவதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, இந்த செயற்திட்டத்திற்கான முதலீட்டை முதலீட்டாளர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாவிட்டால், இந்த | கணக்காய்வுக் குழுவின் அவதானிப்புகளிற்காக சபைப் பத்திரம் குழுவிற்கு முன்வைக்கப்பட்டதுடன் சபையின் தீர்மானத்தின் படி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனக் குறிக் கோள்களை அடை வதற்காக இது வரை செய்யப் பட்ட வேலைகளை பயனுள்ளதாக பயன்படுத்த வேண் டும். |

செயற்திட்டத்திற்கு ஏற்பட்டுள்ள ரூபா 301.19 மில்லியன் செலவை வேரொறு முதலீட்டாளரால் ஏற்க முடியாத சூழ்நிலை காணப்படுவதால் இந்தச் செலவு சபைக்கான செலவாகவே காணப்படக்கூடிய ஆபத்து உள்ளது.

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய இலங்கை மின்சார சட்டத்தின் 24 (1) (இ) பிரிவின் படி, மின்சக்திக்கான நியாயமான முன்னறிவிப்பு தேவையை பூர்த்தி செய்யும் விதத்தில் மின் உற்பத்தி நிலையங்களில் போதுமான இயலளவு காணப்படுவதை சபை உறுதிப்படுத்துதல் வேண்டும். இருப்பினும், நீண்டகால மின்பிறப் பாக்க விரிவாக்கத் திட்டத்தின் பிரகாரம் மின்வலு ஆலைகள் நிறுவப்பட்டிருக்காமை காரணமாக மேலதிக கிரயத்தில் குறுங்கால அடிப்படையில் அனல் மின்வலுவை கொள்வனவு செய்யவேண்டிய நிலை சபைக்கு ஏற்பட்டுள்ளது. | நீண்ட கால, குறைந்த விலை மின்வலு நிலையங்கள் சரியான நேரத்தில் எதிர்பார்த்தபடி உருவாக்கப்படாத போது, (இதற்குப் பல காரணங்கள் உள்ளன, அவற்றில் பெரும்பாலானவை இ.மி.ச. இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை), மின்சார பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்காகவும் மின்சாரச் சட்டத்தின் பிரிவு 24 (1) (உ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள (பரிமாற்ற அனுமதிப்பத்திரதாரர்) கடமைக்கு இணங்க, முன்னறிவிப்புச் செய்யப்பட்ட மின்சார தேவையை பூர்த்தி செய்வதற்குப் போதுமான மின் இயலளவு இருப்பதை உறுதி செய்வதற்காகவும் குறுகிய கால குறைநிரப்பு இயலளவை கொள்வனவு செய்ய வேண்டிய கட்டாயம் இ.மி.ச. இற்கு ஏற்படுகின்றது.<br>எனவே, குறிப்பிடப்பட்டுள்ள இந்த கொள்வனவு, பிரிவு 24 (1) (இ) உடன் இணங்குவதனால் இது சட்டத்தை மீறிய செயல் அல்ல.<br><br>மேலும், இ.மி.ச. நீண்ட கால தலைமுறை விரிவாக்கத் திட்டங்களைத் தயாரித்திருந்த போதிலும், LTGEP களில் இனங்காணப்பட்ட இத்தகைய நிலையங்களின் அபிவிருத்தியை மேற்கொள்ள இ.மி.ச. இற்கு எவ்வித அதிகாரம் இல்லை. இ.மி.ச. ஏனைய முகவர் நிலையங்களை பெரிதும் சார்ந்துள்ளதுடன் PUCSL இனால் வெளியிடப்பட்ட 2016 இன் 02 ஆம் இலக்க ”மின்சாரம் (கொள்வனவு) விதிகள் மற்றும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டுதல்களால் நிர்வகிக்கப்படுகிறது. இந்த செயல்முறைகளில் சில ஒன்றை ஒன்று விஞ்சுவதாக உள்ளன. | நீண்டகால மின்பிறப் பாக்க விரிவாக்கத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2017 மே 16 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், சீஎம்ஈசீ பொறியியலாளர்களை சபைக்கு இடமாற்றம் செய்வதற்காக சாத்தியமான தொழில்நுட்ப வேலைத்திட்டமொன்றின் முக்கியத்துவம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த தீர்மானத்தை கருத்திற் கொள்ளாதும் அமைச்சரவையிடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமலும் லக்விஜய மின்வலு நிலையத்தை இயக்குதல் மற்றும் பேணுதலுக்கான இரண்டாவது மற்றும் மூன்றாவது தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கைகளில் முறையே 2017 நவம்பர் 23 மற்றும் 2020 பெப்ரவரி 25 ஆந் திகதிகளில் சபை கைச்சாத்திட்டிருந்தது. மேற்படி இரண்டு உடன்படிக்கைகளினதும் மொத்தப் பட்டியல் பெறுமதி (2017 ஒக்தோபர் 01 முதல் 2021 செப்தெம்பர் 30 வரை) யூஎஸ்டொலர் 13,766,367 ஆகும். மேலும், இந்த ஆலையை 2022 சனவரி 01 முதல் ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைச் சேவையை பெற்றுக் கொள்வதற்காக சீஎம்ஈசீ லங்கா (பிரைவட்) லிமிடட் உடன் 2021 திசெம்பர் 27 ஆந் திகதி ரூபா 435.64 மில்லியன் தொகைக்கு (பெ.சே.வ. உள்ளடங்கலாக) மேலுமொரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த மின்வலு ஆலையை இயக்குதல் மற்றும் பராமரிப்பத்தல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட பின்னரும், 2021 ஆம் ஆண்டில் மாத்திரம் 758,587 mwh எரிசக்தி இழப்பு மற்றும் 105 நாட்கள் செயலிழப்புடன் 16 மின்சாரத் தடைச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன. இந்த மின்சாரத் தடங்கல்கள் நாட்டின் மின்வலு விநியோகத்தில் குறிப்பிடத்தக்களவு எதிர்மறையான தாக்கத்தை விளைவித்திருந்தன. | 2017 இன் ஆரம்பத்தில், சுமார் 170 CMEC ஊழியர்கள் பணியாற்றினர். காலப்போக்கில் இ.மி.ச. ஊழியர்களுக்கு அவர்களின் அறிவை மாற்றியதன் மூலம் அந்த எண்ணிக்கை 15 ஆகக் குறைக்க ப்பட்டது.<br><br>தற்போதைய நிலை பின்வருமாறாகும்.<br><br>கௌரவ மின்வலு அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தை (82/2921/E) கருத்தில் கொண்டு, O&M ஆலோசனை சேவையை வழங்கியமைக்காக CMEC க்கு செலுத்த வேண்டிய அனைத்து நிலுவைத் தொகைகளையும் செலுத்துவதற்கு 2021 திசெம்பர் 29 அன்று அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டது. தொடர்புடைய தீர்மானத்தின் தொடர்பு இலக்கம் PE/TEN/SCAPC/SJ/2021/18 ஆகும்.<br><br>செயலிழப்புகளின் எண்ணிக்கை ஆலையின் செயலாற்றலை பிரதிபலிப்பதில்லை. உள்வாரி மற்றும் வெளிவாரியான சிக்கல்களால் ஆலையில் செயலிழப்புகள் இடம்பெறுகின்றன. வெளிவாரி சிக்கல்களை கட்டுப்படுத்துவதற்கு LVPP க்கு முடியாதுள்ளது. மின்வலு உற்பத்தி நிலையங்களின் செயலாற்றலை மதிப்பிடுவதற்கு ஆலை கிடைக்கக்கூடிய காரணி மற்றும் ஆலைக் காரணி ஆகியவை பொருத்தமான குறியீடுகளாகும். | உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (இ) 2011 முதல் 2021 வரை செயற்திட்டப்பணியை முடிப்பதில் ஏற்பட்ட தாமதத்தினால் மேலதிக இடத் தேவை, நோக்கெல்லை மாற்றங்கள் மற்றும் பணவீக்கம் என்பன காரணமாக உத்தேச தலைமை அலுவலக கட்டிடத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,000 மில்லியன் இலிருந்து ரூபா 6,161.87 மில்லியன் (மதியுரைச்சேவை மற்றும் | உத்தேச தலைமை அலுவலக கட்டிடத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் அதிகரிப்பதற்கான காரணங்கள் பின்வருமாறு அடையாளம் காணப்பட்டுள்ளன.<br>I. கட்டிடத்தின் உள்ளேயுள்ள ஏட்ரியம் கிணற்றை மூடுவதன் மூலம் அலுவலகத்திற்கு அதிகபட்ச இடத்தைப் பயன்படுத்தும் | தேவையற்ற கிரயத்தை தவிர்ப்பதற்காக குறித்த செயற்திட்டக் காலத்தில் செயற்திட்டம் பூரணப்படுத்தப்படுவதை உறுதிசெய்தல் |

முந்தைய ஒப்பந்ததாரருக்காக செலுத்தப்பட்ட பணம் உட்பட) வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும், 2017 முதல் 2020 வரையான காலப்பகுதியில் ரூபா 284.41 மில்லியன் செலவில் தற்போதைய தலைமை அலுவலகக் கட்டிடம் புனரமைக்கப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டில் ஒரு புதிய கட்டிடத்தை கட்டி முடிப்பதற்கு திட்டமிடப்பட்ட பின்னரும் தற்போதைய கட்டிடத்தின் உரிமைத்துவம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

நோக்கத்திற்காக கட்டிட தளத்தின் விஸ்தீரணம் அதிகரிக்கப்பட்டது. எனவே கட்டிடத்தின் தளப்பரப்பு 27,750 சதுர மீட்டரிலிருந்து 33,818 சதுர மீட்டராக அதிகரிக்கப்பட்டதுடன் மொத்த தளப்பரப்பு 6,068 சதுர மீட்டர் (65,290 சதுர அடி) ஆக அதிகரிக்கப்பட்டது. அதன்படி, மேலதிக வேலைகள் காரணமாக கிரயம் அதிகரித்துள்ளது.

II. 2018 திசெம்பர் முதல் 2021 மார்ச் வரையான காலத்தில் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு.

III. அனைத்து அலுவலகங்களுக்கும் உட்பிரித்தல் ஏற்பாட்டை அறிமுகப்படுத்தியமை.

IV. கட்டிட மற்றும் நிர்மாணத்திற்கான முன்னைய வடிவமைப்பில் சேர்க்கப்படாத அத்தியாவசிய கட்டிட சேவைகளான கட்டிட சுத்தீகரித்தல் முறைமை, அணுகல் கட்டுப்பாட்டு முறைமை, CCTV கேமரா முறைமை, எரிவாயு வழங்கல், கழிவுநீர் சுத்திகரிப்பு போன்றன அறிமுகப்படுத்தப்பட்டமை.

தற்போதுள்ள தலைமை அலுவலக கட்டிடம் ஏறக்குறைய ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டு இன்றும் இயங்கி வருகின்றது. கட்டிடத்தின் பழமை காரணமாக CECB இனது மதியுரைஞரின் பரிந்துரையின்படி மேலும் இருபது ஆண்டுகளுக்குத் தாங்கும் வகையில் பல்வேறு பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எனவே, தற்போதுள்ள கட்டிடத்தின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் இ.மி.ச. இன் சொத்து முகாமைத்துவ பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் சிவில் விமான போக்குவரத்து கட்டுப்பாடுகள் காரணமாக, இ.மி.ச. இன் நாரஹேன்பிட்ட உத்தேச தலைமை அலுவலக கட்டிடத்தின் மாடிகளின் எண்ணிக்கை பதினொரு மாடிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் இ.மி.ச.

வேண்டும்.

| | | |
|---|---|---|
| | இன் தற்போதைய தலைமை அலுவலக கட்டிடத்தை கொழும்பு நகர மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள அலுவலகங்களுக்கு வாடகைக்கு வழங்குவதன் மூலம் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஈ) 2018 – 2037 வரையான நீண்ட கால மின்பிறப்பாக்க விரிவாக்கத் திட்டத்தின் படி, 500 MW, 657MW, 430MW மற்றும் 445MW புதிய மின்பிறப்பாக்கத்தை முறையே 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், திட்டமிடப்பட்ட புதிய 2032MW மேலதிக இயலளவில் 661.6MW இயலளவுடைய மின்வலு ஆலைகள் மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆகையால், புதிய பின்பிறப்பாக்க ஆலைகளை அமுல்படுத்தலின் செயல் முன்னேற்றம் மிகக் குறைவாக காணப்பட்டதுடன் குறைந்த கிரயத்தில் மின்சாரத்தை வழங்குகின்ற குறிக்கோள் அடையப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, ரூபா 6.54 பில்லியன் பெறுமதியான 267.17Ghw எரிசக்தி, மேலதிக மின்வலுவாக மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | இ.மி.ச. நீண்ட கால மின்பிறப்பாக்க விரிவாக்கத் திட்டங்களைத் தயாரித்திருந்த போதிலும், LTGEP களில் இனங்காணப்பட்ட இத்தகைய நிலையங்களின் அபிவிருத்தியை மேற்கொள்ள இ.மி.ச. இற்கு எவ்வித அதிகாரம் இல்லை. இ.மி.ச. ஏனைய முகவர் நிலையங்களை பெரிதும் சார்ந்துள்ளதுடன் PUCSL இனால் வெளியிடப்பட்ட 2016 இன் 02 ஆம் இலக்க ”மின்சாரம் (கொள்வனவு) விதிகள் மற்றும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டுதல்களால் நிர்வகிக்கப்படுகிறது. இந்த செயல்முறைகளில் சில ஒன்றை ஒன்று விஞ்சுவதாக உள்ளன. | குறைந்த கிரயத்தில் மின்சாரத்தை வழங்குகின்ற குறிக்கோளை அடைவதற்காக குறைந்த கிரயத்திலான நீண்ட கால மின்பிறப்பாக்க விரிவாக்கத் திட்டத்தை ஆரம்பிக்கும் பணியை துரிதப்படுத்த வேண்டும். |
| (உ) சீஎம்ஈசீ ஆல் சமர்ப்பிக்கப்பட்ட பயிற்சியளிப்பு ஆவணங்களின் படி, உபகரணங்களின் செயலாற்றலை பராமரிப்பதற்கு, மீட்டெடுப்பதற்கு அல்லது மேம்படுத்துவதற்கு விரிவானதோர் பிரித்தெடுக்கும் களப்பரிசோதனை மற்றும் அலகு பழுதுபார்த்தல் ஆகியவற்றைக் குறிக்கும் "A" நிலை பராமரிப்பு இடைவெளியானது 4 முதல் 6 ஆண்டுகளிற்கு இடைப்பட்டதாக காணப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், லக்விஜய மின்வலு உற்பத்தி நிலையத்தின் 02 மற்றும் 03 அலகுகளுக்கான “A" நிலை பராமரிப்பானது அந்த அலகுகள் ஆரம்பிக்கப்பட்டு 7 வருடங்கள் கடந்த பின்னரும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அத்துடன், லக்விஜய மின்வலு உற்பத்தி நிலையத்தின் 02 மற்றும் 03 அலகுகள் தொடர்பாக 663,510Mwh எரிசக்தி ஆற்றல் இழப்புடன் கூடிய 13 மின்தடங்கல் சந்தர்ப்பங்கள் மீளாய்வாண்டில் ஏற்பட்டுள்ளமை மேலும் | பிரிவு 2 இன் மட்டம் ‘‘ஏ’’ இற்கான மறுசீரமைப்பு 2020 இல் திட்டமிடப்பட்டது. இந்த சேவையின் பெறுகைக்காக SCAPC ஐ நியமிக்குமாறு இ.மி.ச. 2020 பெப்ரவரி மாதத்தில் கோரிக்கை விடுத்தது. SCAPC மற்றும் TEC நியமிக்கப்பட்டமையால் நிபுணத்துவ சேவையைப் பெறுவதற்கான பெறுகை செயல்முறை 2020 இல் தொடங்கப்பட்டது. CMEC இனால் ஆர்வ வெளிப்படுத்தல் அழைக்கப்பட்டதுடன் தொடர்புடைய அமைச்சரவை ஒப்புதல் 2021 யூலை 01 இல் பெறப்பட்டது. பிரதான சேவை வழங்கல் ஒப்பந்தம் 2021 யூலை 16 அன்று CMEC க்கு வழங்கப்பட்டது.<br>• 2020 ஆம் ஆண்டில் உலகளாவிய கோவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக பெறுகை செயல்முறையை செயல்படுத்த முடியவில்லை. இரு | கணக்காய்வாளரால் கணக்கிடப்பட்ட மின்தடைகள், கட்டாய செயலிழப்புகள் காரணமாக ஏற்பட்ட உள்வாரியான முறிவுகளை அடிப்படையாகக் கொண்டதுடன் இது வெளிப்புற காரணங்கள் மற்றும் திட்டமிடப்பட்ட செயலிழப்புகளாக காணப்படவில்லை. எனவே, உபகரணங்களின் செயலாற்றலை மேம்படுத்துவதற்காக அவற்றை உரிய முறையில் பழுது பார்த்து பராமரிப்பதற்கு அட்டவணை |

அவதானிக்கப்பட்டது.

நாடுகளிலும் நிலவிய நாடு முடக்கல் நிலைமை பெறுகை செயல்முறையில் பாதிப்பை ஏற்படுத்தியது.

- இ.மி.ச. இற்கும் CMEC இற்கும் இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போதிலும், சீன நிபுணர்களை அவர்களுக்கு பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாக CMEC ஆல் அறிவிக்கப்பட்டதற்கு அமைய, மறுசீரமைப்பு பணிகளை 2021 செப்தெம்பர் இல் மேற்கொள்வதற்கு மீண்டும் திட்டமிடப்பட்டது. இரு நாடுகளிலும் விதிக்கப்பட்டுள்ள கோவிட்-19 கட்டுப்பாடுகள் குறிப்பாக தனிமைப்படுத்தல் நியதி காரணமாக இது 2022 இற்கு பிற்போடப்பட்டது. பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையே இதற்கான காரணமாகும். ஆகையால் இப்பணிகள் 2022 யூன் இற்கு ஒத்திவைக்கப்பட்டது.

- 2022 யூன் 18 ஆந் திகதி மட்டம் ‘‘ஏ’’ இன் மறுசீரமைப்பை பிரிவு 2 இடைநிறுத்தியது.

கணக்காய்வு அறிக்கையில் 14 மின்தடங்கல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. உள்வாரி மற்றும் வெளிப்புற நிகழ்வுகள் காரணமாக ஏற்படும் தடஙகல்களைக் கருத்தில் கொண்டு இந்த மின்தடைகளின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டுள்ளது. உள்ளக நிகழ்வுகள் என்பது ஆலையிலுள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களில் ஏற்படும் கோளாறுகளாகும். ஆலைக்கு வெளியே தேசிய மின்வழங்கல் முறைமையில் ஏற்படுகின்ற பிரச்சனைகளே வெளிப்புற தவறுகளாகும்.

மிகக் குறுகிய காலத்திற்குள் ஏற்படுகின்ற உட்புறக் குறைபாடுகள் காரணமாக சில தடங்கல்கள் ஏற்படுவதுடன், அதைச் சரிசெய்து சில மணிநேரங்களில் ஆலையை மீண்டும் செயற்படுத்த முடியும். இந்த வகையான தடங்கல்கள் ஒட்டுமொத்த ஆலையின் செயலாற்றலை பாதிப்பதில்லை. பிரிவு 02 மற்றும் பிரிவு 03 மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த தேறிய எரிசக்தியின் அளவானது ஆலை

யின்படி சரியான நேரத்தில் பராமரிப்பு பணிகளை செய்ய வேண்டும்.

| | | |
|---|---|---|
| | தொடங்கப்பட்ட நாளிலிருந்து முறையே 15,482.01 GWh மற்றும் 14,087.50 GWh ஆகக் காணப்பட்டது. | |
| (ஊ) தீர்க்கப்படாதுள்ள ஆட்சேபனைகள் காரணமாக ‘‘லைட்டிங் ஸ்ரீலங்கா’’ ஹம்பாந்தோட்டை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 15 வருடங்கள் கடந்த பின்னரும் கூட தங்காலை கேன்ட்ரி இன் நோனாகம கேன்ட்ரி லைன் (டவர் 13 முதல் 36 வரை) மின்வழங்கல் செயற்திட்டத்தின் எஞ்சிய பணிகளை பூரணப்படுத்த சபையால் முடிந்திருக்கவில்லை. | பல ஆட்சேபனைகள் பெறப்பட்டுள்ளன. PHM கிளையானது PUCSL வழிகாட்டுதல்களுக்கு இணங்க முறையான விடுப்பு அனுமதிக்கான செயல்முறையைத் தொடங்கியது. நிலைமையை அறிந்து கொள்வதற்காக அண்மையில் தங்காலை சட்டமா அதிபர் மற்றும் தொடர்புடைய ஜி.எஸ். களுடன் சந்திப்பு மேற்கொள்ளப்பட்டது. | இந்த விடயத்தை தீர்த்துவைக்க உடனடியாக நடவடிக்கை எடுப்பதுடன், எஞ்சிய வேலைகளை முடிப்பதற்கு காணிப் பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்ட நிதிகள் காலரீதியாக பயன்படுத்தப்படாததன் காரணமாக அந்தக் கடன்களிலிருந்து 2020 ஆம் ஆண்டில் கடனளிக்கும் முகவரால் கடப்பாட்டுக் கட்டணங் களாக ரூபா 61.39 மில்லியன் தொகை கழிக்கப்பட்டிருந்தது. அநேகமான செயற்திட்டங்கள் உரிய திகதிகளில் அமுல்படுத்தப்பட்டிருக்கா மையால் மேலதிக கடப்பாட்டுக் கட்டணங்களை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், கணிப்பீடுகள் இன்மை காரணமாக கடப்பாட்டுக் கட்டணங்களின் சரியான தன்மையினை கணக்காய்வில் மெய்மையாய்வு செய்ய முடிந்திரு க்கவில்லை. | அனைத்து செயற்திட்டங்களுக்கும் கடப்பாட்டுக் கட்டணம் பொதுவானதாக உள்ளதுடன் செயற்திட்டம் உரியவாறு பட்டியலிடப்பட்டிருப்பினும், கடன் உடன்படிக்கைகளிலுள்ள கடுமையான நிபந்தனைகள் காரணமாக அதைத் தவிர்க்க முடியாதுள்ளது. | மேலதிக தாமதக் கட்டணங்களைத் தவிர்ப்பதற்காக திட்மிடப்பட்டவாறு செயற்திட்டப் பணிகளை அமுல்படுத்த வேண்டும். |
| (ஏ) 2006 நவம்பர் 20 தொடக்கம் 2012 பெப்ரவரி 20 வரையான காலப்பகுதியின் போது சொத்து முகாமைத்துவப் பிரிவில் (மின்வலுப் பொறி) ஏற்பட்டிருந்த ரூபா 3.67 மில்லியன் இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான நபர் தொடர்பாக முறையான புலனாய்வு முடிவடைந்திருந்த போதிலும் அந்த நபருக்கு எதிராக 2018 ஆகஸ்ட் 16 வரை சபையால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் அதே ஊழியர் சபையின் இன்னொரு அலுவலகத்தில் மோசடியொன்றில் ஈடுபட்டிருந்ததுடன் அது 2016 திசெம்பர் 05 இல் இடம்பெற்றிருந்தது. முன்னைய மோசடியைக் கருத்திற் கொள்ளாது மோசடிப் பெறுமதியாக ரூபா 99,155 மாத்திரம் அறவிடப்பட்ட பின்னர் அவரது வேலை முடிவுறுத்தப்பட்டிருந்தது. | திரு. ஆர்.பி. வெதகெதரவிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்காக, வழக்குத் தாக்கல் செய்வதற்கு தேவையான கோப்புகளுடன் இலங்கை மின்சார சபை அதிகாரிகள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு பல தடவைகள் அழைக்கப்பட்டுள்ளனர்.<br><br>திரு. ஆர்.பி. வெதகெதரவிடமிருந்து இருப்புப் பற்றாக்குறையை அறவிடுவதற்காக 2021-11-01 அன்று சட்ட மா அதிபர் திணைக்களத்துடன் பூர்வாங்க கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. எவ்வாறாயினும், அந்த கலந்துரையாடலின் பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் முன்வை க்கப்பட்ட பரிந்துரைகள் பிரதம சட்ட அதிகாரியிடமிருந்து (இ.மி.ச.) இந்த அலுவலகத்திற்கு இதுவரை கிடைக்கப்பெறவில்லை. | இழப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதுடன் ஏதேனும் மோசடி நடந்திருந்தால், நியாயமான காலக்கெடுவுக்குள் விசாரணை நடத்தி, விசாரணை அறிக்கையின் மீது உடனடியாக ஒழுக் காற்று நடவடிக்கை எடுத்து, இ.மி.ச. இற்கு ஏற்படும் இழ ப்புகளைத் தவிர் க்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | 2022-09-12 அன்று பதிறகடமையிலுள்ள பொது முகாமையாளருடன் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. பொது முகாமையாளர் (இ.மி.ச) ஆல் இருப்புக் குறைவு குறித்து மூவரடங்கிய குழுவின் அறிக்கையை கலந்துரையாடப்பட்டதுடன் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | |
| (ஐ) 2021 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 62.95 பில்லியன் மதிப்புள்ள அணைகளின் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு சபை தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேற்குறிப்பிட்ட அனைத்து மின் உற்பத்தி நிலையங்கள் தொடர்பான ஏனைய அனைத்து அணைகளும் இலங்கை மகாவலி அதிகாரசபையால் இயக்கப்பட்டு, பராமரித்து, நிர்வகிக் கப்படுகின்றது. இருப்பினும், நீர்த்தே க்கங்களில் மின்சாரத்தை பிறப்பித்தல் வரையான நீர்வழிப்பாதையை மட்டு மே சபை கையகப்ப டுத்தியுள்ளதுடன் அவற்றை முழுமையாக இயக்குதல், பராமரித்தல், நிர்வகித்தல் என்பன சம்பந்தப்பட்ட மின் நிலையங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. | இ.மி.ச. இன் காணி களிற்கான நில அளவை வேலை களை துரிதப்படு த்தி அவற்றை விலைமதிப்பட வேண்டும். |
| (ஒ) வாழைச்சேனை காகித கூட்டு த்தாபனம் தொடர்பான அமைச்சரவை தீர்மானம் மற்றும் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 361,992,685 தொகையான மிகை அறவீடு மற்றும் வட்டிகளை தள்ளுபடி செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்தச் சபை தீர்மானத்தை முன்னெடுப்பதற்காக, வாழைச்சேனை பேப்பர் கம்பனி லிமிடெட் மற்றும் இ.மி.ச. இற்கு இடையே உடன்படி க்கை கைச்சாத்திடப்படவில்லை. | எஞ்சியவற்றை தீர்ப்பதற்கு நட வடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 28.79 பில்லியன் மொத்த நுகர்வுப்பொருள் கையிருப்பில் 8.5 சதவீதத்தை பிரதிநிதித் துவம் செய்கின்ற ரூபா 2.46 பில்லியன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநி லைமை கூற்றில் மெதுவாக நகரும், நகராத மற்றும் சேதமடைந்த இருப்புக்களாக காட்டப்பட்டுள்ளது. இந்தளவு அதிகமாக நகராத மற்றும் மெதுவாக நகரும் இருப்புக்களை | லக்விஜய மின்வலு ஆலைக் கிரய நிலையம் – ரூபா 1,336,017.15<br>LVPP இலுள்ள சில நுகரத்தக்க இருப்புக்கள் மெதுவாக நகர்வுறுகின்றன. ஏனெனில், அவை தேவையின் நிமித்தம் மாத்திரம் அரிதாக பயன்படுத்தப்படு வதனாலாகும்.<br><br>அனல் மின் தொகுதி – ரூபா 4,197,497.67<br>மேற்படி இருப்புக்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அழிவுகள் மற்றும் இருப்பு வைத்தல் கிரயத்தை குறை ப்பதற்காக மெது வாக நகரும் மற்றும் நகராத இருப்புக்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடு த்தல் வேண்டும். |

பராமரிப்பதனால் அது சேதங்கள், இருப்பு வைத்திருப்பதற்கான கிரயம் மற்றும் மோசடி போன்றன அதிகரிப்பதற்கு வழிவகுக்கும்.

மகாவலி தொகுதி - ரூபா 2,507,161.93 மில்.
மொத்த நுகரத்தக்க இருப்புக்களில் 0.0008 சதவீதத்தை மாத்திரமே இந்த இருப்பு பிரதிபலிக்கின்றது. மேற்படி இருப்புக்களை அகற்றுவதற்கு நடவடி க்கை எடுக்கப்படும்.

லக்ஷபான தொகுதி - ரூபா 10.505 மில்.
ஏற்கனவே அதாவது 2021.10.13 அன்று பயன்படுத்த முடியாத மற்றும் சேதமடைந்த பொருட்களை அப்புறப்ப டுத்த ஒவ்வொரு நிலையத்திற்கும் நான்கு பேர் கொண்ட குழுக்கள் நியமிக்க ப்பட்டுள்ளன.

சமனல தொகுதி –ரூபா 1,573,328.03
நியமிக்கப்பட்ட ஒரு குழுவின் பரிந்துரையின் படி, மேலே குறிப்பிட்ட பயன்படுத்த முடியாத மற்றும் அசையாத பொருட்களிலிருந்து சில அடையாளம் காணப்பட்ட பொருட்களை அப்புறப்படுத்த AGM (பிறப்பாக்கம்) அவர்களிடமிருந்து ஏற்கனவே ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் மீதித்தொகை அப்புறப்புறப்படும்.

சொத்து முகாமைத்துவம் – ரூபா 31,100,900

மின்வலு நிலைய அலகு (கிரயக் குறியீடு: 653)
அசையாத மற்றும் மெதுவாக நகரும் இருப்புகளின் தரப்பட்ட பெறுமதிகள், அவசரமான சூழ்நிலைகளில் களஞ்சிய த்தில் வைத்திருக்கப்பட வேண்டிய மின்பிறப்பாக்கிகளின் பராமரிப்புக்கு அவசியமான உதிரி பாகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. அவற்றை சாதாரண நடைமுறையில் உடனடியாக மற்றும் சரியான நேரத்தில் கொள்வனவு செய்ய முடியாதுள்ளது.

சேதமடைந்த மற்றும் பயன்படுத்த முடியாதுள்ள இருப்புக்களின் பெறும திகள், அப்புறப்படுத்தப்பட வேண்டிய பொருட்களைக் குறிப்பதுடன் அகற்று வதைத் பின்தொடர தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

காற்றுச் சீராக்கல் குளிரூட்டல் பிரிவு (கிரயக் குறியீடு: 656)

அசையாத இருப்பின் தரப்பட்ட பெறுமதியானது சில்லர், AHU, பேக்கேஜ், குளிரூட்டிய அறை மற்றும் பிரேத குளிரூட்டி பராமரிப்புக்கு அவசியமான உதிரி பாகங்களை பிரதிநிதித்துவம் செய்வதுடன் அவற்றை சாதாரண நடைமுறையில் உடனடியாக மற்றும் சரியான நேரத்தில் கொள்வனவு செய்ய முடியாதுள்ளது.

பாரந்தூக்கி பிரிவு (கிரயக் குறியீடு: 657)

அசையாத மற்றும் மெதுவாக நகரும் இருப்புகளின் தரப்பட்ட பெறுமதிகள், அவசரமான சூழ்நிலைகளில் களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட வேண்டிய பாரந்தூக்கிகளின் பராமரிப்புக்கு அவசியமான உதிரி பாகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. அவற்றை சாதாரண நடைமுறையில் உடனடியாக மற்றும் சரியான நேரத்தில் கொள்வனவு செய்ய முடியாதுள்ளது.

சேதமடைந்த மற்றும் பயன்படுத்த முடியாதுள்ள இருப்புக்களின் பெறுமதிகள், அப்புறப்படுத்தப்பட வேண்டிய பொருட்களைக் குறிப்பதுடன் அகற்றுவதைத் பின்தொடர தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

DD1 பிரிவு – ரூபா 824.14 மில்.

இருப்புகளின் அளவைக் குறைப்பதற்கு தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன; தற்போது பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக, மெதுவாக நகரும் பொருட்கள் தகுந்த நேரத்தில் வேலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், மேலதிக பொது முகாமையாளர் DD1 இன் அறிவுறுத்தல்களிற்கு இணங்க DD1 இன் இருப்பு அளவைக் குறைப்பதற்கு தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

DD-02 ரூபா 1,200,857,421.07

2021 இன் வருடாந்த மெய்மையாய்வின் பின்னர், ரூபா 26,853,254.43 பயன்படுத்த முடியாத மற்றும் சேதமடைந்த இருப்புக்களை அகற்றுவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் 2022 மார்ச் 22 ஆந் திகதி பெறப்பட்டது.

DD 03
சப்ரகமுவவில் ரூபா 6,167,272.83 மதிப்புள்ள (சபை அங்கீகரித்த) சேதமடைந்த பொருட்கள், 31.12.2021 இல் உள்ளவாறான பயன்படுத்த முடியாத மற்றும் சேதமடைந்த இருப்பை குறைப்பதற்காக 2022 காலப்பகுதியில் விற்பனை செய்யப்பட்டது.

DD 04
சேதமடைந்த மற்றும் பயன்படுத்த முடியாத கையிருப்பு பொருட்களில், இருப்புக் கணிப்பீட்டுச் சபை (BOS) அடையாளம் கண்டுள்ள ரூபா 3,081,087.50 தொகை விற்கப்படாம் என்பதுடன் ரூபா 683,669.00 பதிவழிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்படும். அவதானிப்புகளின் அடிப்படையில், கணக்குகளில் இருந்து வழக்கற்றுப் போன, செயலற்ற மற்றும் சேதமடைந்த இருப்புக்களின் பெறுமதி களை பதிவழிப்பதற்காக ஒப்புதல் பெறுவதற்கும், GM இன் 2021/GM/39/FM ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி அந்த பொருட்களை விற்பதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்காக 2022 மார்ச் 15 அன்று சபைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் மூன்று ஓய்வுபெற்ற IPP மின்வலு உற்பத்தி நிலையங்களிலிருந்தும் 24MW மேலதிக் மின்வலு உற்பத்தி நிலையத்திலிருந்தும் கொள்வனவு செய்யப்பட்ட மின்வலு அலகு ஒன்றுக்கான கிரயங்கள் முறையே (kWh அலகொன்றுக்கு) ரூபா 21.75, ரூபா 25.26, ரூபா 24.97, மற்றும் ரூபா 88.85 ஆகக் காணப்பட்டதுடன், சராசரி விற்பனை விலை ரூபா 16.37 ஆகும். எனவே, அதிக செலவில் அவசர மின்வலு நிலையங்களை பயன்படுத்தப் படுவதற்குப் பதிலாக, நிகழ் நேரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், குறைந்த கிரயத்திலமைந்த நீண்ட கால மின்வலு உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின்படி மின்வலு உற்பத்தி நிலையங்களை இயக்கிச்செல்ல முடிந்திருந்தால், எரிசக்தி கொள்வன

வருடத்தின் முதல் 04 மாதங்களின் போது வறட்சியான காலநிலை நிலவுகின்ற மையால் நீர்மின் உற்பத்தி குறைவடைந்து முறைமையின் தேவைப்பாடு அதிகரிப்பதன் காரணமாக இக்காலப்பகுதியில் அனைத்து அனல்மின் ஆலைகளும் உச்ச இயலளவில் இயங்குகின்றன. ஆகையால், அந்த காலகட்டத்தில் அனைத்து அனல் மின் நிலையங்களிலும் மின்சார உற்பத்திக்கான அலகுக் கிரயம் (இயலளவு மற்றும் எரிசக்தி கட்டணங்கள் இரண்டையும் கருத்தில் கொள்கையில்) ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது. பின்னர், மழைக்காலம் தொடங்கியவுடன் முறைமை தேவைப்பாடு குறைவடைந்து, நீர் மின்வலு உற்பத்தி நிலையங்கள் அதிகபட்ச இயலளவுடன் இயக்கப்படுவதன் காரணமாக அனல் மின் நிலையங்களின் தேவைப்பாடு குறைவடைகின்றது. அந்தக் காலத்தில் எரிபொருளின் விலையானது செலுத்த வேண்டிய இயலளவுக் கட்டணம் மற்றும் எரிசக்தி கட்டணத்தைக் காட்டிலும்

திட்டத்திலுள்ள வேலைகளை பூரணப்படுத்த துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| வுக்கான இந்த அதிகப்படியான செலவைக் குறைத்திருக்கலாம். | குறைவாக இருக்கும். மேலும், இந்த மின் உற்பத்தி நிலையங்களை மழைக் காலங்களில் கூட இரவுகால உச்ச தேவையை பூர்த்தி செய்வதற்கும் பயன்படுத்த வேண்டும். வருடத்தின் வெவ்வேறு காலங்களில் மின்சாரம் கொள்வனவு செய்யப்படுவதால், மேலே குறிப்பிட்டுள்ள எந்த ஒரு முறையிலும் மின்சார உற்பத்திக்கான அலகுக் கிரயம் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ காணப்படும்.<br><br>ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட், ஏஸ் பவர் ஜெனரேஷன் மாத்தறை (பிரைவேட்) லிமிடெட் மற்றும் ஏசியா பவர் (பிரைவேட்) லிமிடெட் ஆகிய மின்வலு உற்பத்தி நிலையங்களின் ஒப்பந்த காலம் வறட்சி காலத்தில் காலாவதியானதுடன் மற்றும் உச்ச இயலளவு ஆலைக் காரணியின் கீழ் ஆகக்குறைந்த அலகுக் கிரயம் (50% - 70%) (கிலோவாட் ஒன்றுக்கு ரூபா 21.00 - ரூபா 25.00 வரை) காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கொவிட் 19 தாக்கத்தினால் மின் தேவை குறைவடைந்தமை மற்றும் குறித்த காலத்தில் நிலவிய அதிக மழைவீழ்ச்சி காரணமாக வாழைச்சேனை அனல்மின் நிலையம் ஒட்டுமொத்தமாக மிகக் குறைந்த ஆலை இயலளவுக் காரணியின் கீழ் (5.4%) இயக்கப்பட்டது. எனவே, இந்த அனல் மின் நிலையத்தில் மின் உற்பத்திக்கான அலகுக் கிரயம் ரூபா 88.00 ஆகக் காணப்பட்டு உயர் அலகுக் கிரயத்தை காண்பித்தது.<br><br>இந்த விடயத்தை பொறுத்தவரை, அலகு கிரயத்தை நிர்ணயிப்பதற்காக இயலளவுக் கட்டணத்தின் அளவு கருத்திற் கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும், இயலளவுக் கட்டணம் என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட காலத்திற்கான கடப்பாட்டுக் கிரயமாக உள்ளதுடன், இது இ.மி.ச. இற்கான எரிசக்தி விநியோகத்துடன் எந்த தொடர்பையும் கொண்டிருக்கவில்லை. |

## 3.4 கொள்வனவு முகாமைத்துவம்

2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய மின்சார சட்டத்தின் படி, 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னர் மரபுசாராத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (என்சிஆர்இ) செயற்திட்டங்களின் கொள்வனவுகளிற்காக கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள்

மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சிற்றளவு நீர் மின் ஆலைகளுக்கான விலை வீதம் உண்மைக் கிரய முறையில் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த விலை வீதமானது சிற்றளவு நீர் மின் நிலையங்களின் உண்மைக் கிரயத்துடன் எந்தவித தொடர்பும் இல்லாத தவிர்க்கப்பட்ட கிரய முறையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. தவிர்க்கப்பட்ட கிரய முறையானது அனல் மின் ஆலைகளின் வெளியேற்றத்தின் அடிப்படையில் அமைந்திருப்பதுடன், அது எரிபொருள் கிரயத்திலிருந்து வேறுபட்டிருந்தது. பிரதிப் பொது முகாமையாளர் (DGM – முறைமைக் கட்டுப்பாடு) இன் DGM/SYC/TCH/41 கடிதத்தின் படி, சிற்றளவு நீர் மின் ஆலைகளின் அலகு விலை வீதமானது ரூபா 10.00 இற்கும் குறைவாக இருந்திருக்க வேண்டும். இருப்பினும், 2021 ஆம் ஆண்டிற்காக சிற்றளவு நீர் மின் ஆலைகளுக்கான தவிர்க்கப்பட்ட கிரய முறையில் நிர்ணயிக்கப்பட்ட விலை வீதமானது மழைக்காலத்திற்கு ரூபா 19.11 ஆகவும் வறண்ட பருவத்திற்கு ரூபா 20.59 ஆகவும் காணப்பட்டது. மேலும், புள்ளி விவர அறிக்கையின்படி, 2020 ஆம் ஆண்டில் சபையின் ஒரு அலகு நீர் மின்சாரத்திற்கான கிரயம் ரூபா 2.49 ஆகும். | என்சிஆர்இ மின்வலு உற்பத்தி நிலைய மேம்பாட்டிற்காக முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக தவிர்க்கப்பட்ட கிரய அடிப்படையிலான கட்டண முறை ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், இந்த முறையின் குறைபாடுகள் கண்டறியப்பட்டு, 2008 ஆம் ஆண்டு "கிரய பிரதிபலிப்பு, தொழில்நுட்பம் சார்ந்த மூன்று அடுக்குமுறைக் கட்டணம்" என அடையாளம் காணப்பட்ட ஒரு புதிய கட்டண முறை அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், இந்த முறையும் போட்டி கூறுவிலை முறையால் மாற்றப்பட்டு அதற்கமைய சந்தை சக்திகளால கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது. | சிற்றளவு நீர் மின் ஆலைகளுக்கான விலை யிடல் முறை அல்லது விலை வீதத்தை மாற்றுவதற்கான இயலுமையை மீளாய்வு செய்தல் வேண்டும். |
| (ஆ) அதைப் பொருட்படுத் தாமல், கழிவுகளிலிருந்து எரிசக்தி தொழில்நுட்பத்தின் | **ஐந்து மாநகர சபைகளின் திடக் கழிவு ஆலைகள்**<br>என்சிஆர்இ செயற்திட்டங்களை செயல்ப | திறைசேரியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதியை |

| | | |
|---|---|---|
| அடிப்படையில் ஒரு கிலோ வொட்சுக்கு ரூபா 36.20 வீதத்தில் (20 ஆண்டு களுக்கு சமவிகித கட்டணம்) ஐந்து மாநகரசபைகளின் திடக்கழிவு மின்வலு ஆலை களை செயல்படுத்துவதற்கு 2017 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதன்படி, ஒரு திடக்கழிவு ஆலை க்கான மின்சாரம் கொள்வ னவு உடன்படிக்கை 2020 திசெம்பரில் ஒரு சுயாதீன மின்வலு உற்பத்தியாளருடன் கைச்சாத்திடப்பட்டிருந்ததுட ன் அதன் காரணமாக கிலோவாட் ஒன்றுக்கு ரூபா 36.20 வீதமான மொத்த கட்டணத்தை சபை ஏற்றிருந்தது. இருப்பினும், அமைச்சரவை தீர்மானத்தின் படி கிலோவாட் ஒன்றுக்கு ரூபா 13.10 வீத கட்டணம் பொது திறைசேரியினால் திருப்பிச் செலுத்தப்பட்டிருக் கவில்லை. | டுத்துவதில் கேள்விகோரல் நடைமுறை யின் நம்பகத்தன்மை தொடர்பில் தொழில்துறையிலுள்ள ஆர்வமுடைய தரப்பினர்களிடையே தெளிவின்மை உள்ளது. எனவே, என்சிஆர்இ-அடிப்படையிலான மின்வலு இயலளவுக் கொள்வனவானது தரப்படுத்தப்பட்ட கட்டண முறையைப் பயன்படுத்தி 2017 யூலை வரை தொடர்ந்து நடத்தப்பட்டது. மின்சக்தி கொள்வனவானது போட்டி கேள்விகோரல் அடிப்படையில் அமைவேண்டுமென சட்டமா அதிபர் தனது கருத்தை தெரிவித்துள்ளார்.<br><br>மேலும், கொழும்பு (மாநகரசபை) கழிவுகளை எரிசக்தி மின்வலு செயற்திட்டத்திற்கும் தும்போவில கரடியான (மாநகரசபை) கழிவுகளை எரிசக்தி செயற்திட்டத்திற்கும் மாற்று வதற்காக PPA களில் கைச்சாத்திடு வதற்கான 2017-10-10 மற்றும் 2019-02-12 தேதியிட்ட அமைச்சரவை தீர்மானங்க ளுடன் இ.மி.ச. இணங்கியுள்ளது.<br><br>அமைச்சரவை ஒப்புதல் அளித்தபடி, ஒரு கிலோவாட்க்கான மொத்த கட்டணமான ரூபா 36.20 தொகையில் ரூபா 13.10 தொகை பொது திறைசேரியிலிருந்து திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். வெஸ்டர்ன் பவர் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட கட்டணத்தின் மீதமுள்ள பகுதியை திருப்பிச் செலுத்துவதற்காக பொது திறைசேரிக்கு பட்டியல் செய்யப்பட்டது. 2020 திசெம்பர் முதல் 2021 ஆகஸ்ட் வரை மொத்தம் ரூபா 633,260,550.00 பட்டியல்கள் இ.மி.ச ஆல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும், 2022 நவம்பர் வரை எந்தத் திருப்பிச் செலுத்தும் கோரிக்கையும் கிடைத்திருக்கவில்லை. | சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 2021 திசெம்பர் 31 வரை 390 மெகாவாட் இயலளவு டைய 7 என்சிஆர்இ செயற்திட்டங்களுக்கான கொள்வனவுகள் மாத்திரமே தொடங்கப்பட்டிருந்தது. மேலும், மேற்குறிப்பிட்ட மின்வலு ஆலைகளில் 49 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஒரு மின் நிலையம் மாத்திரமே 2021 திசெம்பர் 31 வரை தொடங்க ப்பட்டிருந்தன. | 2020 மார்ச் முதல் கோவிட் 19 தொற்றுநோய் நாட்டில் முதன்முதலில் வெடித்ததுடன் 2021 வரை அவ்வப்போது பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன என்பது குறிப்பிட த்தக்கது. இதன் விளைவாக பெரும் பாலான நடவடிக்கைகள் இடைநிறுத் தப்பட்டு, கிட்டத்தட்ட எல்லாவற்றிலும் தாமதம் ஏற்பட்டது. தற்போது, FOREX, வங்கி வட்டி விகிதங்கள், பணவீக்க விகிதம், பொருள் பற்றாக்குறை, நாணயக் கடிதங்களை திறப்பதில் உள்ள தடைகள் போன்ற பல அளவுருக்களில் காணப்படுகின்ற ஏற்ற இறக்கம் காரணமாக, பெரும்பாலான செயற் | என்சிஆர்இ செயற்தி ட்டங்களுக்கான கொள்வனவு செயல் முறையை துரிதப்ப டுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திட்டங்கள் நிதி ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளன. | |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இ.மி.ச. இன் ஆட்சேர்ப் புக்கள் மற்றும் பதவியுயர்வுத் திட்டம் (எஸ்ஓஆர்) நீண்ட காலமாக நாளது வரையாக்க ப்படவில்லை. | இ.மி.ச. இன் தொழிற்சங்கங்களில் ஒன்றான இலங்கை மின்சார சபை தொழில்நுட்ப பொறியாளர்கள் மற்றும் அத்தியட்சகர்கள் சங்கம் CA/Writ/163/2021 மற்றும் CA/Writ/288/2021 ஆகிய இலக்கமுடைய இரண்டு ரிட் வழக்குகளை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. நீதிமன்றம் இ.மி.ச. இன் எஸ்.ஓ.ஆர்.பி. இற்கான ஏற்கனவே உள்ள திருத்தங்களை நிறுத்துவதற்கு இடைக்கால தடை உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. அதன்படி, இந்த இடைக்காலத் தடை உத்தரவு மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் ரத்து செய்யப்படும் வரை, தற்போதுள்ள எஸ்.ஓ.ஆர்.பி. இனை திருத்துவதற்காக இ.மி.ச. முன்னெடுத்த அனைத்து நேர்மறையான முயற்சிகளையும் நிர்வாகம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது. | ஆட்சேர்ப்புத் திட்ட த்தை அபிவிருத்தி செய்து அதற்கு முகாமைத்துவ சேவைகள் திணை க்களத்தின் அங்கீ காரத்தை பெற்றுக் கொள்வதற்கு உட னடியாக நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) தற்போதுள்ள எஸ்ஓஆர் இன் பிரகாரம், மொத்த மனிதவள உத்தியோகத்தர் (எஸ்ஆர்ஓ) பதவியணியில் 50 சதவீத மானவை வெளியி லிருந்து நிரப்பப்பவதுடன் அந்த சதவீதத்தை ஆண்டி ற்கு ஆண்டு படிப்படியாக 85 சதவீதம் வரை அதிகரிப்ப தற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மேலும், பதவியுயர்வுத் திட்ட த்தில் அவ்வாறு வெளிவா ரியாக ஆட்சேர்ப்புச் செய்யப் பட்ட ஊழியர்களிற்கு தெளி வான பதிவியுயர்த்தல் பாதை யொன்று காணப்படவில்லை. உதாரணமாக சீஈபீயின் இரண்டு பொறியியலாளர்கள் பிரிவுத் தலைவர்களின் தொழிற்பாடுகளை நீண்ட காலமாக மேவுகை செய்திவருகின்றனர். | மனித வள அதிகாரிகளுக்கான பதவி உயர்வு திட்டம் இ.மி.ச. இன் தற்போதைய எஸ்ஆர்ஓபி இல் சேர்க்கப்பட்டுள்ளது. சபையின் இரண்டு பிரிவுத் தலைவர்களின் செயல்பாடுகள் இரண்டு பொறியியலாளர்களால் நீண்ட காலமாகப் பதிற்கடமை செய்யப்படுவதாக கணக்காய்வு வினவலில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இந்த விடயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பிரிவுகளும் தெளிவாக தெரியவில்லை. எனவே, தற்போது விரிவான பதிலை வழங்குவது சாத்தியமில்லை. இருப்பினும், நிதிப் பிரிவைத் தவிர, இ.மி.ச. இன் அனைத்து பிரிவுகளும் மேலதிக பொது முகாமையாளர் பதவிகளை வகிக்கின்ற சிறப்பு வகுப்பு மின் பொறியாளர்களால் தலைமை தாங்கப்படுகிறது. | வெளிவாரியாக ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களிற்கு தெளிவான பதவியு யர்வு முறையினை ஆட்சேர்ப்புத் திட் டம் உள்ளடக் குதல் வேண்டும். |
| (இ) தலைமை சட்ட அதிகாரி பதவியானது சபையின் முக்கிய பதவிகளில் ஒன்றா கும் என்பதுடன் அந்த பதவி சட்டப் பிரிவின் தலைவராக காணப்படுகின்றது. எவ்வா றாயினும், அந்தப் பதவி | வெளிவாரி ஆட்சேர்ப்பின் அடிப்படையில் பொருத்தமான தலைமை சட்ட அதிகாரியை (CLO) பணியமர்த்தும் வேலையில் சபை ஈடுபட்டுள்ளது. இந்தப் பணியை நிறைவே ற்றுவதற்காக, மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்காலத் தடையால் தற்காலிகமாக | நிறுவனத்தின் செயற்பாடுகளை வினைத்திறனாகவு ம் பயனுறுதியா கவும் பேணிச் செல்வதற்கு பிர தான பதவி |

| | | |
|---|---|---|
| 2014 யூன் 03 முதல்வெற்றிடமாக காணப்படுகின்றது. 2021 திசெம்பர் 09 அன்று நடை பெற்ற சபைக் கூட்டத்தில் சட்டப் பிரிவை வலுப்படுத்த பணிப்பாளர் சபை தீர்மானம் எடுத்திருந்த போதிலும், அந்தப் பதவியை நிரப்ப இதுவரை உரிய நடவடிக் கைகள் எடுக்கப்படவில்லை. | இடைநிறுத்தப்பட்டுள்ள, தற்போதுள்ள SORP இனைத் திருத்த வேண்டும். இதற்கிடையில், அரசாங்கக் கொள்கைக்கு இணங்க, 2023 நவம்பர் வரை அனைத்து வெளிப்புற ஆட்சேர்ப்புகளையும் நிறுத்த சபை முடிவு செய்தது. இந்த இரண்டு காரணங்களால், நிர்வாகத்தால் தகுந்த CLO பதவிக்கு வெளிப்புறமாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான விளம்பரத்தை வெளியிட முடியாதுள்ளது. | வெற்றி டங்கள் குறுகிய காலத்தில் நிரப்ப ப்படுதல் வேண்டும். |
| (ஈ) பணிப்பாளர் சபையின் செயலாளர் பதவி 2016 யூலை 08 முதல் வெற்றி டமாக உள்ளதுடன் இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு சபையால் எந்த நடவடி க்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை | சபையின் செயல்பாடுகளை நிர்வகிப்பதற்கு சபையின் செயலாளர் நேரடியாகப் பொறுப்பாக உள்ளார். எவ்வாறாயினும், சபைக்கு ஒரு செயலாளரை வெளியிலிருந்து ஆட்சேர்ப்பதற்கு சபை அனுமதி வழங்கவில்லை. | நிறுவனத்தின் செயற்பாடுகளை வினைத்திறனாகவு ம் பயனுறுதியா கவும் பேணிச் செல்வதற்கு பிர தான பதவி வெற்றி டங்கள் குறுகிய காலத்தில் நிரப்ப ப்படுதல் வேண்டும். |
| (உ) செயற்திட்ட முகாமை யாளர் (ERP) பதவி 2017 மே 29 முதல் வெற்றிடமாக உள்ளதுடன் இதனை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இப்பதவி விநியோகப் பிரிவு 04 இன் மேலதிக பொது முகாமையா ளரால் (AGM) நிர்வகிக்கப்ப டுகின்றது | செயற்திட்ட பணிப்பாளர் (ERP) பதவி 2016 நவம்பர் இல் இ.மி.ச. ஆல் விளம்பரப்ப டுத்தப்பட்டது. இ.மி.ச. இற்குள் இருந்து திறந்த விண்ணப்பங்களை அழைப்பதன் மூலம் பொருத்தமான செயற்திட்ட பணிப்பாளரை நியமிக்க எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், செயற்திட்ட பணிப்பாளரை தெரிவு செய்வதற்காக வெளியிடப்பட்ட விளம்பரத்திற்கு தகுந்த தகுதிபெற்ற விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை. இதன் காரணமாக, அப்போதைய பிரதிப் பொது முகாமையாளர் (WPS1) திரு. ரொஹான் செனவிரத்ன அவர்கள் 2017 மே 29 ஆம் திகதி பொது முகாமையாளரால் அவரது கல்வித் தகைமைகள் மற்றும் பணிமூப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ERP செயற்திட்டத்தின் செயற்திட்டப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். | நிறுவனத்தின் செயற்பாடுகளை வினைத்திறனாகவு ம் பயனுறுதியா கவும் பேணிச் செல்வதற்கு பிர தான பதவி வெற்றி டங்கள் குறுகிய காலத்தில் நிரப்ப ப்படுதல் வேண்டும். |
| (ஊ) கிழக்கு DGM அலுவலக த்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கோப்பின் படி, சில வகை ஊழியர்களில் 123 ஊழியர்கள் அதிகமாக காணப்பட்டனர். இருப்பினும், அதையும் மீறி, 57 திறன் பணியாளர்கள், 163 அமைய பணியாளர்கள் மற்றும் 14 வெளியிலிருந்து பெறப்பட்ட பணியாளர்கள் DGM (கிழக்கு) அலுவலகத்தில் | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கோப்பு 2018 இற்குப் பின்னர் புதுப்பிக்கப்படவில்லை. கடைசியாக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கோப்புடன் ஒப்பிடும் போது திறமையான ஊழியர்களில் சிலர் பற்றாக்குறையாக உள்ளதுடன், மேலும் சில பணியாளர் வகுதிகளில் ஊழியர்கள் அதிகமாக உள்ளனர். எனவே, திறமையான பணியாளருக்கான தேவைகள் திறமையற்ற அல்லது அரை திறமையான ஊழியர்களால் நிரப்பப்பட்டுள்ளன. இது சில வகை ஊழியர் வகுதிகளில் பற்றாக்குறை அல்லது மிகைக்கு | தேவையான மனித வளத்தை இனங்க ண்டு அதற்கேற்ப ஆட்சேர்ப்புச் செய் வதற்கு உரிய நடவடிக்கை எடு த்தல் வேண்டும். |

இணைக்கப்பட்டுள்ளனர். மேலும், 58 பட்டியலிடல் ஆட்கள் அந்த அலுவலகத் திற்கான ஊழியர்கோப்பைக் காட்டிலும் அதிகமாக இணைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், அந்த அலுவலக த்தில் சில பணியாளர் பிரிவுகளில் 365 வெற்றிட ங்கள் காணப்படுகின்றன.

வழிவகுக்கும்.

(எ) அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பின் படி, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு லக்விஜயா மின் நிலைய த்தில் 19 தொழில்நுட்ப பதவிகளில் 260 வெற்றி டங்கள் காணப்பட்டன.

**19 தொழில்நுட்ப பதவிகளின் ஊழியர்கோப்பு விவரங்கள்.**

| **ஆங்கீகரித்த ஊழியர் திட்டத்தின் படி ஊழியர்கோப்பு -2018** | **2021 திசெம்பர் 31 இல் உள்ளவா றான கோப்பு** | **2021 திசெம்பர் 31 இல் உள்ள வாறான வெற்றிடம்** |
|---|---|---|
| 479 | 219 | 260 |

வெளிவாரி ஆட்சேர்ப்புகளை தற்காலிகமாக நிறுத்துவதற்கான அரசாங்கக் கொள்கை யின்படி, 2023 நவம்பர் வரை அனைத்து வெளிவாரி ஆட்சேர்ப்புகளையும் நிறுத்த சபை முடிவு செய்துள்ளது. இருப்பினும், லக்விஜய மின் நிலையத்தில் உள்ள பதவி வெற்றிடங்களை உள்வாரி ஆட்சேர்ப்பு / பதவி உயர்வுகள் மூலம் நிரப்ப நிர்வாகம் முடிந்தவரை முயற்சிகளை எடுக்கும்.

மின்வலு ஆலையை நம்பகரமான நிலையில் வைத்திருக்கும் நோக்கில் செயல்படுவதற்கும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும், மேற்கண்ட தொழில்நுட்பப் பணியிடங்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படும் வரை சம்பந்தப்பட்ட பிரதி மின்வலு முகாமையாளர்களின் பரிந்துரையின் பேரில் தேவையான சேவையை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த விடயத்தை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத் தல் வேண்டும்.